# க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1925௵ மே௴ | இதழ் 9.

## தெய்வ வழிபாடு.

"அறியாத வென்னை யறிவாயு நீயென்ற கம்புறமும்
பிறியா தறிவித்த போறி வாஞ்சுத்தப் பேரொளியோ
குறியாத வானந்தக் கோவோ வமுதருள் குண்டலியோ
சிறியேன் படுந்துயர் கண்டு கல்லாநிழல் சேர்ந்ததுவே"

## வேதவிசாரம்.

(திருவேங்கிடக்கிராமம், திருமலைசாஸ்திரி.)

ஐய, இத்தேசத்தவர்களாகிய வைதிகர் அனைவரும் மிகச்சிறந்த பிரமாணமென வேதங்களைக் கொண்டாடுகிறார்கள். அதில் தத்துவங்கள் பல்கோடி விளங்குகின்றன. அதற்குப் பெரியோர் பற்பல நல்லுரை யியற்றியுள்ளார். அவ்வேதங்களில் இணையில்லாப்பெரும் நம்பிக்கை நம்மவர்க்குண்டு. எவ்விதத்துணிபும் இதனுள்ளடங்கியதாகவே உற்றுநோக்கில் புலப்படும். இத்தகைய வேதங்கள் எல்லாப்பிரமாணங்களிலும் மேலானதாய் நம்மவரால் மதிக்கப்பட்டன. அனேக காலம் அவ்வித நம்மவருக்குள் எவ்வித ஆக்ஷேபமும் இல்லாது இவ்வேதப்பிராமாண்யம் நிலைபெற்று வந்தது. இப்பொழுதும் அனேகர் அவ்விதமே நம்புகிறார். இக்காலத்தோ எப்பொருளிலும் சம்சயம் உண்டானமையால் எல்லாப் பிரமாணங்களும் சம்சயந்தான். இங்ஙனமாயதும் கலிக்கொடுமையாற்றான் 'இவ்வேதம்' எனுஞ்சொல் 'ருக்கு' முதலிய நான்கு சொற்றொடர்களுக்கே பெயராகவிருந்து வழங்கப்பட்டதுபோக, அந்தோ! 'கைபிடித்தவனெல்லாம் கணவனானன்போல' அவ்வம்மத புஸ்தகங்களுக்கும் இதுவே பெயராக வழங்கிவருகிறது. விசேடமாகக் கிறிஸ்தவர் மகமதியர் மற்றவர் இவர்கள் தத்தம் மத புஸ்தகங்களுக்குப் பெயராக வழங்கிவருகிறார்கள். ஓர் தகப்பன் தேடியபொருளைப் பலர் பிரித்துக்கொள்வதுபோல் இத்தேசத்துக்கு வந்தவன் எவனும் வேதச்சொல்லுக்குப் பங்

காளியாயினான். இங்ஙமாக வேதம் எனுஞ் சொற்கு முக்கியவிஷயம் ருக்குமுதலியவைகளே என்பதைக் காட்டிடுவோம்:—

இவ்வேதம் எனும் சொல் 'வித்' என்னும் முற்றுவினைப்பகுதியினின்று பிறந்த சொல்லாகவே இது அறிவின் கருவிஎனப்பொருள் கொடுக்கும் சொல்லாகின்றது. ஆன்மா என்பது அறிவினிடமாயுண்மையாதலாலும் அதற்குக் காட்சிக்கு வேண்டிய கருவிகள் இருக்குங்கால் பல விதமான அறிவுகள் தோன்றி மறந்து வருவதியற்கையாதலாலும் ஆன்மாவானது எக்காலமும் ஒவ்வொரு அறிவு ஏதேனும் பெற்றேயிருக்கும். இவ்வித அறிவைக் கொடுப்பதால் வேதத்துக்குத்தான் வரும் கௌரவம் யாதெனில், கூறுதும்:—

உலகத்தில் இது குடம் இது ஆடை என்பதாதி அறிவின்பயன் குடத்தால் அல்லது ஆடையால் செய்யவேண்டிய தொழிலைச் செய்வதேயன்றி வேறில்லை. வேதத்தால் தோன்றும் அறிவு அத்தன்மைத்தகாது. இவ்வுலகத்துட்பட்டு, தாய் கருக்குழிக்கிரையாய், பவசாகரத்துழலும் ஆன்மகோடிகள் ஈடேற்றமடையும் வழியாய் நல்லறிவுசுடர் கொளுத்தும் கருவியே வேதம் என்றறிந்தடங்குக. மேலும் இருவினைப்பயனைக் கண்ணாற்கண்டு தெளிதல் கூடாமையின் அவற்றை விளக்கும் நன்னூல் ஒன்று மனிதற்கின்றியமையாமையின், அதற்காகவும் வேதம் அவாவப்படும். மனிதனெனப் பிறந்த எவனும் இப்பவப்பிணிதுலையும் வழியைத் தேடவேண்டியதவசியம். இவ்வித நல்லறிவு வேறு எந்நூலிலும் கிடைக்காது. வேதங்களிற்றான் கிடைக்குமாதலாலும், இனி ஆரியவேதங்கள் என வழங்கும் நன்னூல் சுவரம், வர்ணக்ரமம் முதலிய பல நல்லேற்பாடுகளுடன் கூடியமையாலும் அதுகாலத்துக்கேற்ப மாறவும் கூடாது. இனிக்கிறிஸ்தவர் கொண்டவிவிலியம் அங்ஙன மல்லாததெனச் சில காரணங்களால் காட்டிடுவோம். கிறிஸ்தவர்களே ஆங்காங்கு கூடி 'இவ்வேதம் எல்லோருக்கும் உரியது; இதில் எல்லோருக்கும் பொதுவான பிதாவின்பெருமை அளவைகடந்து வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் அவர் குமாரன் ஆகிய கிறிஸ்துவெனும் ரக்ஷகர் மகிமை மிக விரிந்துள்ளது; ஆதலால் எல்லோரும் நம்மிடம் சேருங்கள். உமது பொய்நம்பிக்கையாலமைந்த வருணாச்சிரமங்களை விட்டொழியுங்கள்; ஆங்கிலேயர் பாஷையை அறியுங்கள்; இங்கு வேண்டிய போகங்களை அனுபவிக்கலாம். உங்களுக்கோ மறுபிறப்பில்லை; இப்பிறப்பிலேயே கிறிஸ்துவை நம்பி ஆறுதல் அடையுங்கள் என்பதாதி பலவிஷயங்களை உபதேசித்து ஆரிய நூற்பயிற்சியற்ற சிறுவரைத் தன்வலையிலகப்படுத்தி வருகிறார்கள்.

மேலும் இந்துக்கள் வேதம் பலதேவதைகளைப் பரமாகக் கூறுகின்றது. அவர்களுள் சைவர் வைணவரையும் வைணவர் சைவரையும் தூஷித்திடலால் அவர் கொண்ட வேதநூல் அவர்களாலேயே கண்டிக்கப்பட்டது. ஆயின் அது பிரமாணமாகாதெனவும் ஜாலங்காட்டிப்பேசுவர். இதுவும் தவறு. என்னையெனில், நமது வேதங்கள் பலதேவர்களைப் பரம் எனக்கூறுவ துண்மையோ அல்லவோ எனப் பின்விசாரிப்பாம். அதற்குமுன் இந்துக்கள் பல தேவதைகளை வழிபடுவதால் வருங் குறை யாதோ என விசாரிப்பாம். அவ்விதம் செய்வது அவர்க்கழகே. இதனால் வேதங்களுக்குக் குறைவு ஏதும் இல்லை. பலதேவர்களை இந்துக்கள் வழிபடுவராயினும் அவர் இத்தேவர் எல்லாம் ஒரு பரமான்மாவின் அம்சமெனவே நம்பினவரன்றி வேறுவிதமில்லை. தினந்தோறும் செய்யும் அக்னிகாரியமுதல் எல்லாம் ஈசுவரகைங்கரியம் ஆவதுபோல் இவ்விடத்துள்ள எந்ததேவதையை ஆராதித்தாலும் அது நேரில் வீடு கைகூடச் செய்யாவிடினும் அதனால் பரம்பரையில் நல்ல பயன்கிடைக்கும் என்பதிற்றடையில்லை. இதில் விவரணம் பின்னெடுத்துச்சொல்வோம். கிறீஸ்தவர் மதம் ஒரு தேவனைக் குறித்திடும் நூல் என்பதும் அனேக தேவர்களைத் துதிக்கா நூல் என்பதும் தவறு. அவர் மூலபுஸ்தகம் விவிலியம். அதில் பிதா என்றும், குமாரன் என்றும், பரிசுத்த ஆவி என்றும் மூன்று பொருள் சொல்

லப்பட்டன. இனி ஒரே தேவன் கிறிஸ்தவ மதத்துட் கூறப்பட்டான் என்பது கிறிஸ்தவர்க்குத்தன்மதத்திலும் அறியாமையைக் காட்டும். மூன்று பொருள்கள் சொல்லப்படினும் அவை ஒரு பொருளே என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளவும் கூடாது. என் எனில் கூறுதும். பரிசுத்த ஆவி மற்றதுடன் ஒன்றுபட்டொழியுமாறுல் ஒழிந்திடுக. மற்று பிதாவும் குமாரனும் ஒருபொருளாதல் எவ்வாற்றானும் ஒவ்வாது. ஒவ்வாதவரையில் கிறிஸ்தவர் நூல் ஒரே தேவனைக் குறிக்கும் நூலாகாது. உலகத்தில் தேவதத்தன் பிதா. யஞ்ஞதத்தன் குமாரன் ஆனால் இருவரும் பிறந்த நாள்முதல் மரணம் வரை வேருகவே இன்பதுன்பங்களை அநுபவிக்கக்காணுகிறோம். அன்றி இருவர் ஒருவராகக் கண்டதில்லை. இனி கயிற்றில் தோன்றும் அரவம்போல் பிதாவினிடம் குமாரன் கற்பிதம் எனில், கண்டு சிறிது விசாரிக்கவேண்டும். எங்கேனும் ஓரிடத்தில் கண்ட பொருளை அதுபோன்ற மற்றவிடத்தில் நினைத்தலே மயக்கமெனப்படும். இதே வெறுத்திக் குட்டிலர் கொண்டது அஃதில்லாவிடம் அத்தன்மை வழிபிறக்குமறிவே மயக்கம் என நியாய நூலார் சொல்வர். எவ்விதத்தும் மயக்கத்தில் குடத்தின் உண்மை அறிந்தவர்க்கு மயக்கம் ஒழியும் என்பது எவரும் ஒப்பியதோர் விஷயம். ஆகவே அந்த பொருள் இரண்டு ஒன்றுவதில்லை. மேலும் மயக்கத்தில் தோன்றிய பாம்பினுலாவதொன்றும் உண்மை பயனல்ல. இங்கு பிதாவின் உண்மை யறிந்த பிறகும் குமாரன் தோன்றுமல் இருப்பதில்லை. அதுமட்டோ! குமாரன் பிதாவாவதும் ஒவ்வாது. குமாரன் பூமியில் வந்து பல கிரியைகளைச் செய்து மறுத்துப் பரமண்டலம் போய் அங்கு பிதாவின் வலது புறத்து வீற்றிருக்கின்றுன் என விவிலியம் கூறிநிற்பதால் விவிலியத்தில் ஒரே கடவுள் கூறப்பட்டனர் என்பது தப்பு. 'விவிலியக்கடவுளர் இருவர்க்குக் குறைவில்லை'. ஆயின் இவ்விவிலியத்தை மறுக்க குறைகூறுபவர் கிறிஸ்தவராகார். மேலும் உலகத்தில் எல்லோரும் வழிபடுவதாக நடையத்தைக் காரரவம் என மருண்டோடுபவன் எவனே ஒருவனுளன். எல்லோருக்கும் மயக்கம் ஒரே சமயம் கிடைக்கமாட்டாது. ஆயின் ஒருவனுவது குமாரனையறியாது பிதாவையறியவேண்டும். அங்ஙனமோ இல்லை. இனி வேறுவழியில் விசாரிப்பாம். பால் தயிராவதுபோல் பிதா குமாரன் ஆவான் எனில், மிகநன்று. பால் என்னும் ஒருபொருள் காய்ந்து தோய்ந்து மறுபொருளாகிய மோரு கலந்து பிறகு தயிர் ஆகிறது. இங்ஙனம் பிதா குமாரனுனல் பிதா ஒருவிதம் திரிந்து குமாரனுகவேண்டும். பால் தயிராவதில், பாலும் தயிரும் அறிவிற் பொருளாகையால் ஒரு அறிஞன் தொழிலவாவப்பட, காய்ந்து காய்ச்சும் இடையன் அவாநிலை ஒழிப்பதுபோல் இங்கு பிதாவை குமாரனுக்க ஒருவன் வேண்டும். அதுமட்டோ! தயிரான பால் மீண்டும் பாலாவதில்லை. அதுபோல குமாரனை பிதாமீண்டும் பிதாவாவதும் கூடாது. இங்ஙனம் ஒன்று மாற மற்றொன்றுக மாறி மாறி வந்திடின் பொருண்மை நிலைப்பதெப்படி? அந்தோ! இவர் ஒருதேவனை நிலைக்கச் செய்ய எத்தனித்து உள்ளதுக்கே மோசம் தேடிக்கொண்டார்கள். மேலும் தயிரானகாலத்துப்பாலில்லை. பாலானவிடம் தயிரில்லை. ஆகவே பிதா குமாரன் என்னும் காரண காரியப்பொருள்கள் ஒரே காலத்துத் தனிப்பொருளாய் காணப்பட்டது எவ்வழியும் பொருந்தாது. ஆயின் இவ்வழி விளம்பிபவர் கடவுள் பெருமை யறியாப்பேதை என்பது திண்ணம். மேலும் பிதா என்னும் பொருள் அவர் கொண்டபடி பரமாத்துமப் பொருளன்றே? ஆயின் இனி அவ்வான்ம சொரூபத்தைக் கெடுத்துவிடும் வேறு அறிஞர் இருப்பானு? அப்படியாயின் உலகத்துள்ள குடம் முதலிய அசேதனப்பொருள்களுக்கும் அவ்வான்மப் பொருளுக்கும் வேற்றுமை தான் என்ன? இங்ஙனமொப்பியவர் மதத்தில் கடவுளுக்கும் அழிவும் திரிபும் ஏற்படுகின்றது. இது சிறந்தமல்ல. திரிபுண்டெனில் அப்பொருள் ஆன்மப் பொருளாவதே சம்சயம்; பரமான்மாவாவதெங்கே? மேற்சொல்லிக்காட்டியபடி பிதா எனும் பொருள்

காரியப்பட்டு அசேதனம்போலாகின்றது. தொழிற்பட்டது அனித்தியம். ஆகவே கடவுள் அநித்தியப் பொருளாகவும் ஆக நேரிடுகிறது. ஆயின் நித்தியசித்தனுய பரமாத்மா எச்சமயமும் ஆனந்த ரூபன். அந்தோ! வினில் அசேதனனுகவும் அநித்தியனுகவும் ஆக நேருகின்றது. உலகத்தில் உள்ள ஆஸ்திகன் எவனும் கடவுளை அநித்தியர், விகாரி என்று சொல்லமாட்டான். ஆயின் கிறிஸ்தவர் புஸ்தகம் அவர் மதத்தில் பல தேவர்களைச் சொல்வதென்றே கொண்டடங்கிடல் உண்மைக் கிறிஸ்தவர்க்கழகாம். ஆயின் இவர், ஆரியரைப் பல தேவர்களைக் கொண்டாடுபவர் எனப் பரிகசிக்கவும் வேண்டுமோ? இவ்வழிவிட்டு வேறுவழி நின்று விசாரித்து விவிலியத்தில் ஒரு கடவுள் கூறப்பட்டார். அல்லது பலர் என்பதை விளக்கிடுவாம். நூல்களால் ஆடைபோல பிதாவால் குமாரன் என இருவரை ஒன்றுபடுத்துவாம் எனில், அதனெவ்வாமை வருமாறு:—உலகத்தில நூலின்றித் தனிமையில் ஆடையைக் காண முடியாது. ஆடைக்கு முன்னும் பின்னும் நூலாகவே இருப்பு. நூல் நடுவிலும் இருக்கிறது. ஆகவே நூலிற்படம் எப்பொழுது மின்மையால் அது நெய்பவன் தொழில் மாத்திரத்தில் கற்பிதப்பொருள். அது உண்மைப்பொருளாயின் முக்காலத்தும் இருக்குமல்லவா? ஆடை முக்காலத்து முள்ளதல்ல. ஆகலாற்றான் பொருளிலக்கணமறிந்த பெரியோர் ஆடையில் பொருள் என்பர். மேலும் தகப்பனும் பிள்ளையும் ஆன்மாக்கள் உள்பொருள்கள். வேறுபொருள்கள் நூலும் ஆடையும் ஒருபொருள். அதில் ஆடையோ இல்பொருள். ஆகையாற்றான் தகப்பன் குணம் பிள்ளையிடம் சேருவதில்லை. நூலின் கண்ணமைந்த குணமே ஆடையின் கண்ணுள்ளது. மற்றுமனேக காரணங்களால் இந்நூலாடை திருஷ்டாந்தம் கூடாது. மேலும் இருவரும் ஒன்றுனால் கிறிஸ்து எனும் குமாரன் பிசாசத்திடம் பட்ட துயரம் பிதாவினிடமும் செல்லுமே! இனி இதுபோன்ற பல விஷயங்களில் விவிலியத்தைச் சோதித்தால் அது பல தேவர்களைக் கூறும் ஓர் பேதை நூலா:மேயன்றி வேதநூலாகாது. மேலும் செல்வத்தாலும் வறிமையாலும் அழகின்மைகளாலும் அறிவறிவினர்களாலும் நேரில் கண்கூடாகக் காணப்படுவது போன்ற மறுபிறப்பே இல்லையென நாட்டும் விவிலியமும் ஒரு விஷயமா? ஒரு நன்னூலா? நிற்க; ஆரியசாஸ்திர ரகசியத்தை விளக்கவெழுந்த நீர் என் வினில் கிறிஸ்தவர் முதலியோர் சாஸ்திர விஷயங்களைப் பேசுகின்றீர் எனக் கோபிக்கவேண்டாம். புறமதத்தை ஒழித்துத் தன்மதத்தை ஸ்தாபிப்பதே பெரியோர் நல்வழி என நம்பி அவ்வழி சில எழுதினோம். ஆதலாற்றான் ஸ்ரீசிரோமணி நாதாபட்டாசாரியாதி நையாயிகள் எதுப்போலிகளைக்காட்டிடம் புறமதங்களைக்கண்டித்தே தன்மதத்தை நாட்டவேண்டும் என்றனர். இனி இவ்விவாதத்தைவிட்டுத் தொட்டவிஷயத்தை நீள நடத்துவாம்.

ஐய, நமது வேதங்கள், ருக்கு, யஜுர், சாமம், அதர்வணம், என நான்குவிதமாக விருக்கின்றன. இவற்றுள் ருக்வேதம் சாகை உக. யஜுர்வேதம் சாகைகள் நூறும் ஒன்றும் 101 சாமவேதத்துக்குச் சாகைகள் ஆயிரம் 1000. அதர்வணவேதத்துக்குச் சாகைகள் ஒன்பது. ஆக இவ்வேத சாகைகள் 1131 இவைகளில் எதிலும் உலக சிருஷ்டி முதலுள்ள ஸர்வ ரகசியமும் சொல்லப்பட்டது. இவ்வேதங்களைக் கன்மகாண்டமென்றும் ஞானகாண்டமென்றும் வேறுவழியில் இருபகுதியாக்குவதுண்டு. கன்மகாண்டத்தில் கன்மவியல், அதன்பயன் இம்மை மறுமைகளில் உண்மை, கன்மங்களை விட்டவனுக்குள்ள பிராயச்சித்த மித்தியாதி வெகுவிஷயங்கள் விரிக்கப்பட்டன. இங்கு சொல்லப்படும் எவ்விஷயமும் மக்கள் அறிவு கொண்டு அறியக்கூடாது. அனேககாலம் ஆசிரியன் கருணைபெற்ற பெரியோரன்றி இதன் உண்மையறியார். ஞானகாண்டத்தில் ஆன்மசொரூபத்தை அறியும் வழியும் உண்மையைக் கடைப்பிடித்துய்யும் நீதியும், வீட்டின் பெருமையும் விடுபோகும் வழியும் நிரூபிக்கப்பட்டது மேலும் ஆத்மலாபத்துக் கின்றியமையாத

யோகமுதலியவைகளும் எடுத்துக் காட்டப்பட்டன. அதை விசேஷமாகப் பயிற்சிசெய்பவர் எவ்வழியிலும் பரமான்மாவின் அருள்பெற்று அவனுடன் ஒன்றுபடுவார். ஆகவே அதன் பெருமை அளவிலடங்காது.

இதனுண்மை இப்படியிருக்க, தற்காலத்தறிஞர் சிலர் வேதங்கள் பௌருஷேயங்கள் என வாதிக்கிறார். அவர் கருத்துயாதெனில், ருக்குவேதம் முதலில் என்று துவக்கிய மந்திரத்துக்கு ரிஷி, மதுச்சந்தா, காயித்திரிச் சந்தம் (யாப்பு) அக்னிதேவதை என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் ஆதிகாலத்தில் மதுச்சந்தர் எனவொருவர் தனது புத்திசாலித்தனத்தால் பிராமணனாகிப் பிறகு மந்தரான மாந்தருக்காசாரியனாய் அவர் இந்த ருக்கை இயற்றினார். இதுண்மை அறியாதார், இது அனாதி என்றுவீணில் மயங்கித் தன்னினத்தாருக்கு ஏதேனும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து வீணில் நெருப்பில் நெய்யை ஊற்றி கெடுக்கிறார்கள். ஆயின் முற்காலத்தவர் அவ்வளவுண்மை யறியாப்பேதைகளானதால் அவர் கொண்டபடி கொள்வதுசிதமல்ல. வேதங்களைச்செய்தவர்கள் ரிஷிகள் எனப்படும் முற்காலத்துப் புத்திசாலிகளே. மேலும் இம்மதுச்சந்தர் பல வாக்கியங்களை எழுதியிருப்பதால் வேதமந்திர ரிஷிகளில் இவர் பெயர் பலவிடம் வரும் என்பதும், என்னும் மந்திரத்துக்கு சுனச்சேபர் ரிஷி என்பதனால் அம்மந்திரம் அவர்செய்தது என்றும்பிறர் செய்யும் ஆக்ஷேபம் இது அவர் பயிற்சிக்குறைவால் நேர்ந்தவாக்ஷேபம் எக்காரணத்தாலோவெனில், மேற்கண்டவழியால் அநேக மந்திரங்கள் கற்பிதமே யாகலாமாயினும், பௌருஷேயம் என்பதற்கும் அபௌருஷேயமென்பதற்கும் வேற்றுமை இவ்விதம் எனவறியாது இது பௌருஷேயம் இது அபௌருஷேயம் என்பதாதி வகுப்பேற்படுத்தல்கூடாது. ஆகவே அதைக்காட்டிடுவாம். 'எவ்வாக்கியத்தைப்பிரயோகிக்கவன் முதலில் தனதுமனதில் அவ்வாக்கியப் பொருளைக்கொண்டு அதற்கிணங்கச்சொற்களைச் சொன்னால் அது பௌருஷேய வாக்கியம். உலகத்தில் 'குடத்தைக் கொண்டுவா' என்பதாதிவாக்கியங்களைப்போல் எந்தவாக்கியத்தை எவன் உபயோகித்தாலும் அதன் பொருளையறிந்தே அவன் உச்சரித்தலால் அவன் உள்ளத்திற்றோன்றிய பொருளுக்கேற்ப அவன் செய்தவாக்கியம் பௌருஷேயமே. வேதங்களோ அங்ஙனமல்ல. அனாதி சைதன்ய கனனானாதன் அனாதியில் உள்ள அமைப்பு மாறாது ஒரேவழியாய் உச்சரித்திடுவதால் அது முன் கூறியபடி பௌருஷேயமாகாது. ஆதலாற்றான் 'இம்மாபூதத்தின் உயிர்த்தலே ருக்குவேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணம்' என்பதாகி வேதங்கள் முழக்குகின்றன. இங்கு மகாபூதம் என்றது பரமேசுவரனையே என்பது முக்திகம் முதலிய வுபநிடத்தைப்படிப்பார் அறிவார். இதை இங்கு சுருக்கினோம். விரிவை எதிர்பார்ப்பவர் என்னும் அதிகரணத்தில் ஸ்ரீநீலகண்டசிவசாரியர், ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள், ஸ்ரீராமானுஜாசாரியர், ஸ்ரீமாத்துவாசாரியர் அவர்கள் முதலிய பெரியோர் இயற்றிய பாடில்களைக் கண்டு தெளிவாராக. இனி அந்தந்த மந்திரத்துக்கு ஒவ்வொரு ரிஷிபெயர் இருப்பதற்குக் காரணம் என்னை எனில்; உண்மை வெளியிடுவாம். ஒவ்வொரு மந்திரத்தை முறைபிறழாது பயின்று மாந்தர்பயனடையக்கருதி முதலில் அதனாற்பயன் பெற்ற ஒருவரை ரிஷி எனல் வைதிகரகஸ்யஸம்பிரதாயம். இனி மந்திரத்துக்கு மதுச்சந்தர் ரிஷி என்றால் அந்த ரிஷி அந்த மந்திரத்தால் அக்னியை வழிபட்டு அவர் அருள்பெற்றார் என்பது கருத்து. ஆதலாற்றான் 'முற்காலத்தில் ஒரு அரசன் செய்தயாகத்தில் நரபசுவாகக்கட்டுண்ட சுனச்சேபமுனி தனது அம்மானாகிய ஸ்ரீவிசுவாமித்திரர் அனுக்கிரகித்த மகாமந்திரமாய "இமம்" என்னும் மந்திரத்தால் வருணனை வழிபட்டு அச்சிறை மீண்டான் எனப் புராணங்கள் ஓதுகின்றன. ஆதியில் அம்மந்திரத்தால் வருணனருள்பெற்றவன் சுனச்சேபனே யாதலால் அவனே அம்மந்திர ரிஷியென்றது பொருந்தியது. ஆயின் வேதமந்திரங்களுக்கு ரிஷிகளை எடுத்துரைத்தல் அவைகளைச் செய்தவர் இவர் எனவகுத்

திடவல்லமையற்ற அவ்வம்மந்திரங்களை மாந்தர் சபித்துய்யவேண்டியதிற் சித்திபெற்றவரை எடுத்துரைத்தலே அதன்கருத்தென்க. ஆயின் வேதங்கள் பௌருஷேயங்களாகா. இனி ருக்கு என்பது மந்திரம் எஜுஸ் என்பது ஆணை. (விதியும் விலக்கும்) சாமம் புகழ்மொழி (ஸ்தோத்திரம்.) அதர்வணம் இவையெல்லாம் அடங்கின வேதங்களின் விரிவுக்கஞ்சினோரை நோக்கி ஸ்ரீவேதவ்யாஸபகவான் சிலபகுபாடுகளை வெளியிட்டார். இவர்க்கு முன்னும் இப்பகுபாடுகள் வெகுகாலம் பிழைத்திருந்து இடையிற் சிதைந்தது. ஆகவே அதைமறுத்துச் சீர்திருத்தியது வாதராயணமுனிவர் என்பதே யுண்மை.

## ஜீவகாருண்யம்.

(அ. ச. பாவனாசம், கல்லூரி மாணவன், திருத்தங்கல்.)

காருண்ய சீலர்களே!

ஜீவகாருண்யமென்னும் சொல் ஜீவன் + காருண்யம் என்னும் இருமொழிகள் சேர்ந்த ஒரு தொடர்மொழியாகும். அது பிறஜீவன்களிடத்தில் வைக்கும் அன்பு அல்லது கருணை யெனப் பொருள்படும். ஜீவராசிகளிடத்துக் கருணை செலுத்துதலாவது அவைகளைக் கல்லும், மண்ணும் போன்ற உணர்ச்சியற்ற பொருட்களாகக் கருதாது தங்களுக்குச் சமமாகப் பாவித்து அவைகளுக்கு ஹிதம் செய்தலேயாகும். ஹிதம்செய்யச் சாத்தியப்படாவிடினும் அவைகளுக்கு அஹிதம் செய்யாமலாவதிருப்பது சாலச் சிறந்தது. 'அஹிம்ஸா பரமோ தர்மா' வென்பது கர்மயோகியாகிய வசிஷ்டருடைய வாக்கன்றோ!

இனிக் கொல்லாமையைப் பற்றிச் சிறிது ஆராய்வாம். அன்பே யுருவாயவதரித்த கௌதம புத்தரின் அதிமுக்கியகோட்பாடுகளில் உயிர்வதை நீக்கலைப் பற்றியேயாகும். ஒரு மனிதனுக்குத் தற்கொலை செய்து தன்னுயிரையும் நீத்துக் கொள்வதற்குப் பாத்தியதை யில்லையென்றால் பிறவுயிர்களை நீப்பதற்கு யாது பாத்தியதை ஏற்படப்போகிறது? தருமபுத்திரர், 'விரதங்களிற் சிறந்தது யாது' என்ற கேள்விக்கு 'கொல்லாமையே' யென்று உடனே விடையளித்திருப்பதைச் சாலபுராணங்களின் சாரமாகிய பாரதத்தில் பார்க்கக் காணலாம். ஆகவே பஞ்சமாபாதகங்களில் ஒன்றெனப் பாமரர்களாலும் பழித்துப் புறக்கணிக்கப்படும் இக்கொலை பாதகத்தில் ஈடுபடாமல் அதனின்றும் தப்பி உய்யும் மார்க்கத்தை யறிந்து அதை யனுசரித்து நடத்தலே உத்தமோத்தமமாகும். நம்மவர்களிற் பெரும்பாலோர் ஸ்ரீ பத்திரகாளியம்மன், முத்துமாரியம்மன் முதலிய தங்கள் குலதெய்வங்களின் இச்சையைப் பூர்த்திசெய்யும் பொருட்டும், தங்கள் மனைவி மக்கள் புடைசூழ உண்டு களித்து உல்லாசமாய் வீற்றிருக்கும் பொருட்டும், அற்பருசியை அவாவியும் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாமல் பங்குனி சித்திரை மாசங்களில் வருஷந்தோறும் நிகழ்த்தும் கொலைகளுக்கு அளவேயில்லை. 'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத் துண்ணாமை நன்று' என்ற ஆன்றோர்வாக்கை அவலமாக்கிய இவர்களது அறியாமைதானென்னே!

அடிக்கடி கொலை செய்வதால் இவர்களுடைய மனம் துருப்பிடித்துக் கல்லாக இறுகியன்றோ போயிருக்கிறது. 'அந்திரோகிளிஸனும் சிங்கமும்' என்ற கதையின்மூலம் சதா கொலைசெய்து தின்பதால் முடைநாற்றம் வீசும் வாயைப்படைத்த கேவலம் ஒரு மிருகேந்திரனும்கூடத் தனக்கு ஒரு சமயத்தில் உதவி செய்த ஒருமனிதனது நன்றியை மறவாது அவனிடத்து விஸ்வாசம் பாராட்டியதென அறிகிறோம். பகுத்தறிவைப் படைத்த மானிடர்களா தங்களுக்குப் பக்கத்துணையாயிருப்பனவும், தங்கள் புதல்வரினும் பன்மடங்கதிகமாய்ப் பேணப்படுவதற்கேற்பத் தங்களிடத்துப் பூரண விஸ்வாசத்தைப் படைத்தனவுமாகிய வாயற்ற பிராணிகளை வதைத்துத் தின்

னவேண்டும். 'கொன்றால் பாவம் தின்றால் தீரும்' என்ற கெட்டக்கேடான நாட்டுப்பழமொழியை ஆதாரமாகக் கொண்டு கொன்று தின்பதால் பாவமில்லையெனப் பிதற்றியலைவர் சில பேதைமாக்கள் கொன்றபாவம் தின்பதனால் இரட்டிக்குமேயன்றி ஒரு சிறிதும் குறையுமோ?

இனி மதுமாம்ஸ சம்பந்தத்தைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வாம். மதுவிற்கும் மாமிஸத்திற்கும் மிகவும் நெருங்கிய சிநேக பாந்தத்வம் உண்டு. ஒன்றையொன்றை விட்டுப் பிரிந்திருக்க விரும்புவதில்லை. மதுக்கடைகள் தோறும் மாம்ஸக்கடைகளும் இருப்பதே இதற்குப் போதிய சான்றாம். மாம்ஸமயக்கத்தினாலேயே மதுபானப் பிரியர்களாகவும் நாகரீகக் குடிகாரர்களாகவும் மாறிவிட்டவர்கள் பலர். நாகரீகக் குடியாவது ஒயின், விஸ்கி முதலிய அந்நிய நாட்டுக் காப்பிப் பானங்களைப் புட்டிபுட்டியாக வரவழைத்து வீட்டில் வைத்துக்கொண்டு சமயம் நேர்ந்துழி உபயோகிப்பது இப்புதுப் பழக்கங்களாகிய மதுபானமும் மாம்ஸபட்சணமும் நம்நாட்டைவிட்டு அறவே யொழியும்வரை நம்மவர்கள் தங்களது முன்னோர்களின் பூர்வ நல்ல நிலைமையை ஓர்ந்து அவர்களது ஸ்தானங்களைத் தாங்களும் வகிக்கக் கனவிலும் கருதுவது வியர்த்தமே யாகும்.

திருநெல்வேலி ஜில்லாவின் ஓர் பகுதியாகிய பாளையங் கோட்டையில் உள்ள 'ஆயிரத்தம்மன்' என்ற ஒரு துஷ்ட தேவதையைப் பூஜிக்கும்பொருட்டு அங்குள்ள நமது இந்துக்கள் வருடந்தோறும் செய்துவரும் ஆட்டுப்பலி, பன்றிப்பலி, கோழிப்பலி முதலிய பல்வேறு கொலைகள் கங்குகரையற்றன. இம்மட்டோ! பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை எருமைக்கடாப் பலியும் கொடுத்து வருகிறார்கள். இக்கோரமான காட்சியை நான் நேரிலிருந்து பார்த்துப் பரிதபித்தவனாகலின் சந்தர்ப்பத்திற்கேற்ப இதை இவ்விடத்தில் வரையாதிருக்க முடியவில்லை. 'தேவதைகளுக்கும் பூதபிசாசுகளுக்கும் புலாலை நிவேதித்து அவைகளின் நன்மதிப்பை பெற நாடுவது அரசனுக்குச் செய்த அற்பக்குற்றம் நீங்க வாயில் காப்பவனை வழிபடுவதையொக்கும்' என்ற வாக்கை இவர்கள் மறந்ததென்னே! 'முட்குத்தி கொந்தறியாரோ பிறருயிர் உட்குத்தி யூன்றின்பவர்' என்றார் நாயனாரும். ஆகவே இராமேஸ்வரத்திற்கு ரெயில் போடப்பட்டிருக்கும் இந்த நாகரீக முதிர்ந்த இருபதாம் நூற்றாண்டிலும் இவ்வித பயித்தியம் நம்மவர்களிடம் தலைக்காட்டி வருமானால் நமது பாரதநாடு முன்னேறுவது எங்ஙனம்? 'தானறியாதவன் பிறர்போய்க் கற்பித்தாலறிவனோ' என்ற வேத வாக்கியத்தை மெய்ப்பிக்கவந்த அவதார புருஷர்கள் இவர்கள்தான் போலும்! இவர்களது புன்மதி இருந்தவாறென்ன! ஆக்கியளித்துத் துடைக்கும் ஆதிமத்தியாந்த ரஹித சாக்ஷாத் சிவபெருமானே இவர்களுக்கு நல்லறிவூட்டி நல்வழியில் நடப்பிக்கவேண்டுமாய் அவனது அடிமலர்களை அனுதினமும் தொழுது இறைஞ்சாநிற்பேன்.

# ஹிந்து மகாசபை.

## கல்கத்தாவில் ஏப்ரல்மீ 11உ நடந்தது.

## லாலாலஜபதிராயின் அக்கிராசனப் பிரசங்கம்.

கல்கத்தாவில் 11-ந் தேதியன்று கூடிய ஹிந்துமகாசபையின் 6வது கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் லாலாஜீ கூறியதாவது:

மகாசபையின் நோக்கங்கள் முன்பு நடந்த கூட்டங்களில் போதிய அளவு திட்டப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் மாறுதல் செய்ய வேண்டுவதில்லை. எப்படியிருப்பினும் நம்முடைய நோக்கமானது அன்பு செலுத்துவதுதான் என்றும், துவேஷிப்பதல்லவென்றும் வற்புறுத்த விரும்புகிறேன். ஹிந்துக்கள்

மதப்பற்றுதலுடைய ஜனங்கள். இந்து வேதங்கள் உலகிலுள்ள எல்லாவற்றையும் நேசிக்கும்படி போதிக்கின்றன. இதிலிருந்து இதரர் நம்மை அநீதமாகத் தாக்கினால் நம்முடைய உயிரையும் உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியாதபடி அவ்வளவு கேவலமான உணர்ச்சியால் பாதிக்கப்படவேண்டுமென்று பொருள் ஏற்படாது. நாம் இதர மதத்தினர் உட்பட ஒவ்வொருவருடனும் சிநேகமாக வாழவேண்டுமென்று விரும்புகிறோம். நாம் எவருக்கும் தீங்கு நினைக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவரது மதக் கோட்பாட்டின்படியும் அவரவரது தொழுகை முறையின்படியும் மோக்ஷம் கிடைக்குமென்று நம்புகிறோம். இவ்வளவுக்கு இதர மதத்தினருடன் நமக்குச் சச்சரவு கிடையாது. ஆனால் எல்லோரும் அத்தகைய அபிப்பிராயமோ மனோபாவமோ கொண்டவர்களாக இருக்கவில்லை என்பதையும், சுயநலத்தின் காரணமாகவோ அன்றி சமூகநலத்தின் காரணமாகவோ பிறர் நமது சமூகத்தை சிலசமயங்களில் அநீதமாகத் தாக்குகின்றார்கள் என்பதையும் நாம் மறக்கமுடியாது. நம்மையும் நம்முடைய சமூகத்தையும் இம்மாதிரி எவரும் தாக்குவதைத் தடுக்க நாம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் நமக்கு பகவத் கீதையைவிடச் சிறந்த வழிகாட்டி எதுவுமில்லை. மற்றவர்கள் நம்மை நசுக்கும்படி நாம் அவ்வளவு பலஹீனமாக இருக்கக் கூடாது. இது வன்றி அஹிம்சையைப்பற்றித் தப்பர்த்தங் கொள்ளவும் கூடாது. அஹிம்சை உயர்ந்த மதந்தான். ஆனால் சத்தியத்திலும் உயர்ந்த மதமெதுவுமில்லை. அஹிம்சையும் சத்தியமும் ஒன்றுதான். இது விஷயத்தில் நாம் நடந்துகொள்ளும் விதத்தை முன்னிட்டு பிறர் நமது உரிமைகளில் தலையிடவும் நம்மை அவமானப்படுத்தவும் நம்மை அழிக்கவும் தைரியங்கொள்ள நாம் இடமளிக்கக்கூடாது. தனிப்பட்ட நபர்கள் தங்களது வாழ்க்கையின் பகுதியொன்றில் அஹிம்சா தர்மத்தின் உயர்ந்த லக்ஷியப்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கலாம். ஆனால் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற தர்மப்படி அஹிம்சையானது ஒரு சமூகத்தினால் கையாளப்படவேண்டிய தவசியமாகும். பண்டைய ஹிந்துமதமானது இதையே போதிக்கின்றது. இக்கொள்கையை ஆதாரமாகக் கொண்டே வருணாச்சிரம முறை என ஸ்தாபிக்கப்படுகின்றது. சந்நியாசிக்கு எது சிறந்த மத தர்மமாக இருக்கின்றதோ அது கிரகஸ்தனுக்கு பெரும் பாவமாக இருக்கலாம். பற்பல ஆசிரமத்தாரின் கடமைகளையும் கலந்து தக்க காலம் வருமுன்பு அவற்றைக் கையாளும்படி செய்வது மிக்க குழப்பத்தை விளைவிக்கக்கூடும். நாம் வருணாச்சிரம தர்மத்தின் உண்மையான கொள்கைகளைக் கைவிட்டு விட்டது மிக்கவருந்தத்தக்கதாகும். குழப்பமும் சீர்கேடும் உண்டாகும்படி ஹிந்து சமூக வாழ்க்கையில் அவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆதியில் இருந்தபடியோ அல்லது சற்றேறக்குறைய முன்பிருந்ததற்குச் சமமாகவோ இருக்கும்படியோ கூடிய நிலைமையில் நாம் மீண்டும் வருணாச்சிரம முறையை ஸ்தாபிக்க முடியாது. பழைய கொள்கைபடி வருணாச்சிர முறை மீண்டும் ஸ்தாபிக்க நம்மால் இயலுமா என்பது என்னால் எடுத்துரைக்கக் கூடிய கேள்வியல்ல. ஆனால் கிரகஸ்தர்களாக விருக்கும் வாலிபர்களுக்கு சந்நியாசி தர்மத்தை ஏற்படுத்துவது ஹிந்துமத போதனைக்கும் கலாஞானத்திற்கும் முற்றிலும் மாறுபட்டதாக இருக்குமென்பதில் எனக்கு ஐயமில்லை. அவ்வாறு செய்தால் நாசமே ஏற்படும்.

அஹிம்சையானது பலதரப்பட்டதாக இருக்கும். சந்நியாசிக்கு அது அஹிம்சையாக இருப்பினும் அது கிரஹஸ்தனுக்கு அஹிம்சையாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை கிரஹஸ்தாச்சிரமத்தில் ஈடுபட்டுத் தத்தளிக்காதவர் எவரும் சந்நியாசிகளாகவும் பிரசாரகர்களாகவும் ஆகத் தகுதியற்றவர் என்று நமது சாஸ்திரங்கள் போதிக்கின்றன. வாலிபர்கள் வைராக்கியத்தையும் சந்நியாச தர்மத்தையும் மேற்கொள்ள வேண்டுமென்று போதிக்கும் ஹிந்துசமூகத் தலைவர்களும் அறிவாளிகளும் பலர் இருப்பதைக் கண்டு நான் மிக்க வருந்து

கின்றேன். சிறுவர்களும் வாலிபர்களும் வைசாக்கிய போதனை நிரம்பியவர்களாவது ஹிந்துக்களின் உண்மையான கருத்திற்கே மாறுபட்டதாகும். மிகுந்த அவநம்பிக்கை கொண்டிருப்பதால் நாம் மிக்க துக்ககரமாக இருக்கின்றோம்.

இதனுடன் ஹிந்து தலைவர்களே ஹிந்துஜாதியை உற்சாகமற்றதாய்ச் செய்யத் தங்களால் இயன்றதனைத்தையும் செய்துவருகின்றார்கள். நம்முடைய குழந்தைகள் வாலிபர் மடந்தையர்கள் இவர்களது வாழ்க்கையில் சந்தோஷம் தோன்றும்படி செய்ய நாம் பலமாக முயற்சி செய்யவேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

சுய முயற்சி வேண்டும்.

சுய முயற்சியால் இவ்வுலகில் முன்னுக்கு வரலாமென்ற நம்பிக்கையும் ஆர்வத்தையும் அவர்களுக்கு நாம் உண்டாக்கவேண்டும். அவர்களைப் புதிய துறையில் இறங்கும்படியும் அதைச் சாதிக்கவேண்டும், இதைச் சாதிக்க வேண்டுமென்ற ஆசைகொள்ளும்படியும் நாம் செய்ய வேண்டும். உலக வாழ்க்கையில் இச்சைகொள்ளாமலும் ஆசையில்லாமலும் இருக்கும் வாலிபர்களையும் இளம் பெண்மக்களையும் கொண்ட எந்த ஜாதியும் சுதந்தரத்தையோ அல்லது சுபக்ஷமான நிலைமையையோ அடையக்கூடுமென்று எதிர்பார்க்க இயலாது. இதனால் சோம்பேலை விட்டு விடக்கூடாது.

மத சம்பந்தமான மனஸ்தாபங்கள்.

இந்து-முஸ்லீம் மத சம்பந்தமான மனஸ்தாபங்களைப் போக்க டில்லி ஒற்றுமை மகாநாட்டில் இந்துக்கள் செய்த முடிவானது நியாயமான ராஜியாகும். இவ்விரண்டு சமூகத்தினருக்குள்ளும் இனி மதச் சச்சரவுகள் ஏற்படாவொட்டாதபடி செய்வதற்காக இதனை உண்மையாக அனுஷ்டித்து மதச் சச்சரவுக்கான ஒரு பெரிய காரணத்தைப் போக்க வேண்டும். இந்து மகா சபையானது மதவிஷயங்களில் பலவிதமான இந்து வகுப்பினரது அபிப்பிராயத்தில் தலையிட விரும்பவில்லை. அது எந்த வகுப்பினருக்கும் பரிந்து பேசாமல் பாரபக்ஷமற்ற முறையில் நடக்கும் மதவிஷயத்திலோ அன்றி மத சம்பந்தமான இதர விஷயங்களிலோ இந்து மகாசபை தலையிடாமல் இந்துக்களது ஒற்றுமைக்காகப் பாடுபடும் பலவிதமான நோக்கத்துடன் பல சமூகத்தினரும் பல வழிகளிலும் இந்து சமூகத்தைத் தாக்கிவருகின்றனர். இவற்றுள் சிலநோக்கங்கள் முற்றிலும் நியாயமானவையான படியால் அவற்றை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. உதாரணமாக முஸ்லீம்களும் கிருஸ்தவர்களும் தங்களால் எவ்வளவு ஹிந்துக்களைத் தங்களது மதத்தில் சேர்க்க முடியுமோ அவ்வளவு ஹிந்துக்களையும் சேர்க்க முயற்சித்து வருகின்றனர். தங்களது சமூகத்திலிருப்பவரைப் பிறமதத்தில்சேர்க்கச் செய்யப்படும் முயற்சிகளிலிருந்து தங்களது சமூகத்தைக் காக்க ஹிந்துமகாசபை தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம். முஸ்லீம்களும் கிறிஸ்துவர்களும் ஹிந்துக்களைத் தங்களது மதத்தில் சேர்க்க முயல்வது அவர்களது நெறிப்படி நியாயமான காரியமேயாகும். அதற்கு இடங்கொடுக்காமல் நமது சமூகத்தைக் காப்பது நமது நெறிப்படி நியாயமேயாகும். சங்கதன் இயக்கமானது தற்காப்பிற்காக ஏற்பட்ட இயக்கமாகும். இது இந்துக்கள் எல்லோருடைய ஆதரவையும் பெறத்தக்க மதசம்பந்தமான இயக்கமாகும். இது இந்து சமூகத்திலிருந்து பிரிந்துபோனவர்களை அதில் கொண்டுவந்து சேர்க்க ஏற்பட்டிருக்கிறது. சங்கதன் இயக்கத்திற்காக ஹிந்து சமூகத்தை எல்லாத் திசையிலிருந்தும் தாக்குவதற்குச் சற்றும் நியாயமேயில்லை. ஒவ்வொரு மதத்தினரும் தங்களை ஒற்றுமைப்படுத்திக்கொள்ள பலவழியிலும் ஏற்பாடு செய்து வருகின்றனர். ஹிந்துக்கள் இதுவிஷயமாக இவ்வளவுகாலம் அசிரத்தையாக இருந்துவிட்டு தற்பொழுது மற்ற சமூகத்தினரைப்பார்த்து இந்தச் சரியானவழியில் இறங்கி இருக்கின்றனர். இதற்காக எவரும் ஹிந்துக்களைக்குறை கூற முடியாது. இதன் சரித்திரத்தைப்பார்த்தால் இது புதிய இயக்கமல்ல என்பது தெரியவரும். இந்து சமூகமானது ஒன்றுபட்டு அரசாங்கத்துடனும் மற்ற சமூகத்தாருடனும் சம்பந்தம்

வைத்துக் கொள்ளவேண்டியதவசியம். இந்த மகா சபையில் பல பகுதியினரும் சேரவேண்டுமென்று நான் கேட்கின்றேன். வெளியிலிருந்தும் உள்ளிருந்தும் ஏற்படும் பொதுவான ஆபத்துக்களை இந்து சமூகம் உணரவேண்டும். நாம் பலவிதமான வகுப்புகளையும் கோட்பாடுகளையும் வைத்துக்கொண்டு மிக்க அதிகமாகப் பிளவு பட்டுக்கிடக்கின்றோம். எந்தக்கொள்கை மீதாவது ஜாதிமீதாவது குறை கூற எனக்குத் தற்பொழுது உத்தேசமில்லை. ஆனால் நாம் தொகையிலும் முன்னேற்றத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் பின்னடையாமலிருக்க வேண்டுமானால் நம்முள் அதிக ஒற்றுமை ஏற்படவேண்டும். நம்முள் உள்ள நபர்களை நாம் இழக்க முடியாது. அற்பக்காரணங்களுக்காக ஜாதிப் பிரஷ்டஞ் செய்யும் பழைய வழக்கத்தைக் கைவிடவேண்டும். எவருடைய மனதையும் புண்படுத்தாமல் முன்பு இந்துக்களாக இருந்து பிறமதம் புகுந்தவரை மீண்டும் இந்துக்களாகச் சேர்த்துக்கொள்ளச் சகல முயற்சியும் செய்ய வேண்டும். பிராமணர்களென்றும் க்ஷத்திரியர்களென்றும் வைசியர்களென்றும் கூறிக்கொள்ளும் உயர் வகுப்பினர், விவசாயிகள், குடியானவர்கள், தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என்ற கிழ்த்தர வகுப்பினர் தான் ஜாதிக்கு முதுகெலும்பு போன்றவர்களென்பதையும் அவர்களை அலட்சியம் செய்தால் தங்களுக்கே ஆபத்து நேரிடுமென்பதையும் உணர வேண்டும்.

### தீண்டாமையை ஒழிப்பதெப்படி.

ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் தொகை 5-அல்லது 7 கோடி என்று கூறப்படுகின்றது. ஆனால் இது நம்பக்கூடிய புள்ளிவிவரமல்ல. வேண்டுமென்றே அவர்களது தொகையை மிகைப் படுத்தியும் கூறியிருக்கலாம். எவ்வகையிலும் தீண்டத்தகாதவராகாத சில வகுப்பினரும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். ஒரு மாகாணத்தில் தீண்டாதவர்களாயிருப்பவர் மற்றொரு மாகாணத்தில் தீண்டக் கூடியவராக இருக்கின்றனர். இப்படிப்பட்ட வகுப்பினரும் தீண்டத்தகாதவர்களது ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

எல்லா மாகாணங்களிலும் தீண்டத் தகாதவர்களாக உள்ளவர்களின் தொகையை நாம் எடுத்துக் கணக்கிட்டுப் பார்த்தால் அது மிகவும் சொற்பமாகவே இருக்கும். எவரையும் தீண்டத்தகாதவராகக் கருதுவதே தவறாகும். அதிலும் ஒரே மதத்தினரைத் தீண்டத்தகாதவராகக் கருதுவது பெரும் தவறாகும். ஆகதிரால் தீண்டாமையைப் போக்கும்படி இந்த சமூகத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்தியாவெங்கும் ஒரே மாதிரியாய்த் தீண்டப்படாதவர்களாகக் கருதப்படாதவர்கள் விஷயத்திலேனும் தீண்டாமையைப் போக்கவேண்டும். தீண்டாமையை எவ்வளவு தூரம் போக்குவது என்பது பற்றி வைதீகர்களுக்குள்ளும் தீண்டத்தகாதவர்களுக்குள்ளும் அபிப்பிராய பேதமிருந்து வருகிறது. நான் என் சம்பந்தம் வரையில் அடியோடு ஒழிக்கத் தயாராக இருந்தபோதிலும் வைதீகர்களைச் சமாஸ்ப்படுத்திக் கொண்டு போவதற்காக அலகபாத் கூட்டத்தில் செய்த குறைந்த பக்ஷமான தீர்மானத்தை விட அதிகமாகச் சொல்லும்படி நான் மகா சபையை வற்புறுத்தவில்லை. தீண்டாமையைப் போக்க எம்முறைகளை அனுஷ்டிக்கலாமென்ற விஷயத்தை இந்துக்களைக் கலந்து முடிவு செய்யும்படி மாகாண சபைகளை விட்டுவிடவேண்டும். இது வைதீகர்களைத் திருப்தி செய்யக் கூடும். ஏனெனில் அவர்கள் தங்களது செல்வாக்குக்குட் பட்டவர்களைக் கொண்டு இது சம்பந்தமாக எது செய்தால் சிறந்ததாயிருககுமென்பதை நிர்ணயிக்க முடியும். ஏராளமான செல்வாக்கும் பண பலமும் படைத்தவர்கள் தங்களது மதத்திற்கு ஒடுக்கப்பட்டவர்களை மாற்றமுனைந்து வந்திருப்பதால் இவ்வகுப்பினரை அசட்டை செய்தால் பெரும் ஆபத்து ஏற்படும். இந்துமதமானது சமயத்திற்கு ஏற்றபடி மாறி வருவதால் தான் நமது ஜாதி இன்னும் நசிக்காமல் இருக்கின்றது. அதுதான் நமக்குத் தற்சமயம் அவசியமாக இருக்கிறது. ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு கல்வி போதிக்

கவும் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடைய வசதி செய்து கொடுக்கவுமேனும் நாம் அனைவரும் ஒருங்கு சேர்வோமாக. பொருளாதாரத் துறையிலும் ராஜீயத்துறையிலும் எற்படும் மாறுதல்களின் காரணமாகவே பெரும்பாலும் விவசாயிகளுக்கும் விவசாயிகளல்லாதவருக்கும் மிகுந்தபிளவு ஏற்பட்டுவருகிறதுபோலும். இதனையும்போக்க நாம் முயலவேண்டும்.

# புருஷோத்தமன் அல்லது யாதவ அன்றில்.

(222-ம் பக்கத்தொடர்ச்சி.)

(ஆதித்தன், அ. குமரகுருபரன்.)

## ஒன்பதாம் காட்சி.

புரு:—மார்த்தாண்டரே! உம்மை நாட்டை விட்டுத் துரத்திய குற்றத்தைப் பொறுக்க, உமது வரவு நல்வரவாகுக.

மார்:—அரசே! அடியேனின் பிழையை மன்னிக்க வேண்டுகிறேன்.

புரு:—மார்த்தாண்டரே! உம்முடன் சமீபத்தினிற்கும் சிறுவன் சிறுமியர் யாவராகும்?

மார்:—அரசே! இச்சிறுவன் நமது பூர்வீக நண்பரான சந்திரசேகர ராஜனின் புதல்வன். இக்கன்னிகை அதோ நிற்கும் கோனாருடைய புத்திரி. இக்கன்னிகைமீது, குலசேகரனென்னும் நாமமுடைய இவன் காதல்கொண்டான். இது சந்திரசேகரருக்குத் தெரிந்து, இவனைக் கண்டித்தார். ஆனால் இளவரசரோ அக்கன்னிகையை உயிர்விடினும் மறக்காது, மணந்துகொள்ள விரும்புகிறார். ஆனபடியின் அவர்களின் இல்லறத்தை பூர்த்தி பண்ணுவதற்காக அவ்விருவரையும் இங்கழைத்துவந்தேன். புருஷோத்தமன் பின்னர் குலசேகரனுக் காசனமளித்து, யாவரையும் உட்காரச்செய்த பின் அவ் விளங்கன்னிகையை உற்றுநோக்கினான். அவன் கண்களில் நீர்ததும்பிற்று. அப்போது அவனது முகம், சாரதியாகச் சென்ற நாமகாராஜன் குழந்தைகளைக் கண்டவுடன் எப்படி விழித்தனனோ அம்மாதிரியான விழியைத் தந்தது. இருகண்களிலும் நீர் ததும்பிற்று. 'அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்; ஆர்வலார் புன்கணீர் பூசல்தரும்' உடனே சப்புக்கோனாரை அழைத்து,கோனாரே இக்குழந்தையின் தாயை எங்கே யென வினவினார். அதற்குக் கோனார் அரசே இக்குழந்தையின் தாய் சிறிது காலம் குழந்தையில்லாதிருந்தாள். நாங்களிருவரும் ஓர் ஆடுகளை மேய்த்துக்கொண்டு கடற்கரைக்குச் சமீபமாக வரும்போது ஓர் அழுகைக்குரல் கேட்டு அங்குமிங்கும் பார்த்து இறுதியில் ஓர் பேழையைக்கண்டோம். அதற்குள் இக்குழந்தை சில ஆடை ஆபரணங்களுடன் இருந்தது. அதை எடுத்து வளர்த்து வந்தோம். குழந்தை யெங்களின் வளர்ப்புப் புத்திரியே என்றார். உடனே அரசன் அப்படியாயின் அந்த நகைகள் இருக்கின்றனவா என்ன, கோனார் தான் விற்றதுபோக மீதியிருந்த சில நகைகளையும் ஆடைகளையும் காட்டினார். உடனே, இரண்டாம் மந்திரியாயிருந்த கார்த்திகேயர் மனைவியாகிய மாணிக்கவல்லி, 'ஐயே இது என் கணவனார் தங்கள் குழந்தைக்கும் பேழையிலடைக்கும்போது பூட்டியவை. குழந்தையும் அதுபோலவே இருக்கிறது என்றாள். உடனே அரசன் கோனாரே, நீரிக்குழந்தையை எடுத்து எவ்வளவுபருவத்திலிருந்து வளர்க்கிறீர் என, கோனார் தான் குழந்தையை எடுக்கும்போது, அது பிறந்து ஒருமாதத்திற்குள்ளாகவே இருந்திருக்கவேண்டும் என்றார். அரசன், மந்திரிமார், மார்த்தாண்டர், கோனார் யாவருமாகக் கூடி, குழந்தை அரச குமரியெனவே தீர்மானித்தார்கள். புருஷோத்தமன் தன் குழந்தை பிறந்த வேளையையும் மந்திரி மார்த்தாண்டர் சந்திரசேகரன், மனைவி குமரனை பிரிந்ததையும் நினைத்து வருந்தினார் எனினும், இப்போது தன் குமாரியும் மந்திரியும் வந்ததை

உத்தேசித்தும், தனது பழைய நண்பன் மகளே தனது மணமாளனான் என்பதை உத்தேசித்து மனப்பூரிப் படைந்தான். விவாஹத்திற்குத் தானும் சம்மதித்திருப்பதாகத் தெரிவித்து, விவாஹமுகூர்த்தம் குறிப்பிட்டான்.

இங்கிவ்வாறு இருக்க சந்திரசேகர மன்னன் தனது குமாரனும், மார்த்தாண்டரும் காணாமையைப்பற்றி வருந்தி, மந்திரியார் புருஷோத்தமன் அரண்மனையே சென்றிருப்பாரென உத்தேசித்து, தருமாபுரி அரண்மனை வந்துசேர்ந்தான். புருஷோத்தமன் இழந்த கண்களைப் பெற்றவன்போல் களிப்பெய்தி, அவனை ஆசனத்தமர்த்தித் தான்செய்த குற்றங்களுக்குச் சாஷ்டாங்க தண்டத்துடன் மன்னிப்புகேட்டு, அருகிலமர்ந்தான். மந்திரி மார்த்தாண்டரும் மரியாதையுடன் நின்றார். சந்திரசேகரனை முன்னர் துரத்திய செய்கை இப்போது மன்னன் ஞாபகத்திற்கு வந்தது. அவற்றையடக்கிக் குலசேகரனின் கதையைக் கூறி, அவன் மணக்க விரும்பியது தனது குழந்தையையே யெனவும் பேசினான். இதைக்கேட்ட சந்திரசேகரன் பேரானந்த மெய்தினான் விவாஹமகோத்சவம் நடைபெறும் நாள் நெருங்கியது.

விவாஹத்திற்கு ஒருநாளைக்கு முன்னர் அரசனுக்கு மனதில் ஓர்விதக் கவலையுண்டாயிற்று. ஆ! எனது புத்திரி, நண்பர் மார்த்தாண்டர் யாவரும் வந்துவிட்டனர். விவாஹம் நடைபெறுகிறது இந்த மங்களகாரியத்திற்கு என் மனைவி யில்லாதுபோயினளே, அவள் ரூபத்தைப்போல ஒரு உருவமும் பார்க்க முடிகிறதில்லையே என்று ஏங்கினான். அப்போது அருகேநின்ற மாணிக்கவல்லி, அரசே மஹாராணி மாதிரியாக எங்கள் வீட்டில் ஓர் பதுமை செய்வித்திருக்கிறேன். பிரியமானால் அதைப்பார்த்து மனந்தேறலாமென்றனள். அரசனும் மனைவி மேலுண்டாகிய ஆசையால் பதுமையைப் பார்க்கச் சென்றான்.

## பத்தாம் காட்சி, மாணிக்கவல்லி வீடு.

மாணி:—மன்னா! நீர் அங்கு நில்லும் நான் திரையைத் தூக்குகிறேன் பாரும்.

புரு:—சரி? மாணிக்கம் அப்படியே செய்.

(பதுமையைப் பார்க்கிறான்.)

மாணி:—அரசே பதுமைஎப்படியிருக்கிறது.

புரு:—மாணிக்கம் நான் நன்றாகப் பார்க்கவில்லையே! அதிகநேரப் பார்க்கவிடு.

மாணி:—சரி! இதோ பாரும்.

(உடனே திரையை மூடுகிறாள்.)

புரு:—பதுமை நன்றாகத்தா னிருக்கிறது. ஆனால் அவளைவிட வயது அதிகப்பட்டவள் போல் காட்டுகிறது. இன்னும் பார்ப்போம்.

மாணி:—அவள் இப்போதிருந்தால் என்ன நிலைமையிலிருப்பளோ அதேபடி செய்யப்பட்டது இதோ பாரும்.

புரு:—ஏ மாணிக்கம்! அதன் கண்கள் தட்டி விழிக்கின்றன.

மாணி:—ஒஹோ இதேது மோசம் அரசன் பரவசமாகிவிட்டார் சரி! அரண்மனைக்குப் போகலாம். இனிக் காட்டமுடியாது.

புரு:—மாணிக்கம் இன்னும் ஒருமுறை நான் பார்க்கட்டும்.

(பதுமை தெரிகிறது.)

புரு:—ஹே மாணிக்கம் மூச்சுவிட்டதுபோலவும் தெரிகிறது. நான் அதற்கு ஒரு முத்தம் கொடுக்க உத்தரவுகொடு.

மாணி:—அரசே! பித்தங்கொண்டலையாதேயும். கனைத்திருக்கிறது என்றீர். கண்விழிக்கிறது என்றீர். மூச்சுவிடுகிறது என்றீர் இப்போது முத்தம் கொடுப்பேன் என்கிறீரே. உமது ஆண்டன்மை யெங்கே? அந்தப் பொம்மையின்மீது ஏன் உமக்கு இவ்வளவு பிரியம். அதன் காலைக் கழுவச்சொல்லினும் செய்பவர் போல் தோணுகிறதே.

புரு:—மாணிக்கம் காலைக்கழுவுவது மட்டுமல்ல. தலையில் தூக்கிச் சுமக்கவேண்டுமானாலும் சுமக்கிறேன். மாணிக்கம் நான் நீ என்ன சொன்னாலும் செய்கிறேன். எனக்கு இந்தப் பதுமையைக் கொடு.

மாணி:—நான் என்ன சொன்னாலும் செய்வீரா? இந்தப் பொம்மை என்னசொன்னாலும் கூடச் செய்வீர்போ லிருக்கிறதே! நல்ல வேடிக்கை.

புரு:—பொம்மை சொல்கிறபடியும் செய்யத் தயாராக விருக்கிறேன். ஆண்டவன் பொம்மைக்குப் பேசும் சக்தியைக் கொடுத்தானில்லையே.

மாணி:—பொம்மை சொல்கிறபடியும் நடப்பீராக்கும் ஏ பொம்மே! எனது மஹாராஜனிடம் ஒன்று பேசு பார்ப்போம். நான் தாளம் போடுகிறேன் என்று பரிகாசமாக தாளம் போட்டாள். பொம்மை நாட்டியஞ் செய்து பாடிவருகிறது.

நம்பினோனுனையே மெட்டு.

கல்யாணி, ஆதி.

மன்னர் ஹேஸரியே இந்த
மாது பேரில் வாது ஆமோ (ம)
மாதடியா ளுன்மனைவி
மன்றுடினே னெனையணைவீர்
கோதின்றினீ ரருள்புரிவீர்
கோலா சிலா மேலா யாள்வாய் (ம)
மாணிக்கத்தா ளய்தேன்சின்னாள்
மன்றுடினேன் காப்பாய்மன்னா
பேணினார்நன் கென்னைகன்னா
பேதை பெண்ணை யாத ரிவா (ம)
முத்தமிழ்கி தத்தினாலா
தித்தன்கித மோதியென்னை
நத்தினதுந் தனின்பாதா
ரவிந் தம்வ ரந்த ருவாய் (ம)

புருஷோத்தமன்.

என்ன கேள்விமுறை மெட்டு.

பிலஹரி, ரூபகம்.

ரங்கநாயகியே
எந்தன் தப்பிதம்நீ சிந்தை கொள்ளாதே (ர)
பேதை தப்பிதம்
மேதை சகித்தநீ
யாத ரிக்காயோ (ர)
சந்தேகந் தவறாக என்மனங் கொண்டேனே
சந்திரசேகரன் நட்பையும் விண்டேனே
னொந்தே னென்னை மு
னிந்தே னானாண்டு
வந்தே னித்ததி (ர)
பெற்ற குழந்தையும் பக்கத்தில் நின்றிட
பேதையே யாவரும் கண்டின்பு வந்திட
ஆதித்தன் கிதம்
ஓதினே னினி
வாதில்லே சுபம் (ர)

புருஷோ:—ஏ மாணிக்கவல்லி, நினது கருணையே கருணை இறந்ததாக நினைத்து யான் வருந்திய சமயத்து இழந்த கண்களை மீண்டு அளிப்பது போல் எனக்கு மனையாட்டியளித்த உன்னை என் உயிருள்ளளவும் நான் மறவேன், மறவேன் இதோ உன்னை ஸ்தோத்திரம் செய்கிறேன். ரங்கநாயகி தயவுசெய்து நான்செய்த குற்றத்தை மன்னிப்பாய் நிரபராதியாகிய உன்னைக்குற்றஞ் சாட்டினேன் அதன் பலனை அடைந்த யாவையும் நீ மாணிக்கவல்லி மூலமாயறிந்திருப்பாய் இப்போதும் நீ திரும்ப வந்து என்னைச் சந்தோஷிக்கச் செய்தது போலவே, சந்திரசேகரன், மார்த்தாண்டர், கடவுளனுப்பிய இதோ நிற்கும் உனது மகள் யாவரும் வந்து என்னையும் உன்னையும் மகிழ்விக்க வந்திருக்கின்றனர். இவளோ உன் மகள் இரங்கநாயகியும் தன் மகளை ஆலிங்கனஞ்செய்து கண்ணீர் ததும்ப நின்றாள். பின்னர் யாவரும் அரண்மனைசென்றார். புருஷோத்தமன் மனைவியிடம் விவாஹ உடன்படிக்கையை அறிவித்தான்.

## பதினோரும் காட்சி, அரண்மனை முகூர்த்தம்.

கமுகு, அசோகு, வாழை முதலிய மரங்களால் நகர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டும், தெருவாசல்கள் தோறும் பூரண கும்பங்கள் தீபங்களும் பிரகாசிக்கவும், அரண்மனை முன்னர் அழகிய சிங்காரப் பந்தரமைக்கப்பட்டிருக்க, நல்ல சுப முகூர்த்தத்தில் மறையவர்,

அக்கினி ஜலசாக்ஷியாகவும், சந்திரசேகர, புருஷோத்தமர் மந்திரிமார், இருவரின் சுற்றத்தார் தாய் மார், முதலியோர் சாக்ஷியாக மங்கள பேரிகை முழகத்தில் புருஷோத்தம மஹாராஜன் புத்திரிக்கும், சந்திரசேகரர் புத்திரருக்கும் திருமங்கிலியஞ்சூட்ட, யாவரும் ஆனந்த சாகரத் தமிழ்ந்திருந்தனர்.

சுபம்! மங்களம்.

# பைபிள் மாமிச பட்சணம்.

(சா. வேதமுத்து, உபாத்தியாயர், சாட்சியாபுரம்.)

(முன்தொடர்ச்சி.)

முதல் உலகத்தாரால் மற்ற ஜீவஜந்துக்கள் ஆளப்படும் என்பதாயிருக்க, இரண்டாம உலகத்தாரால் அவை அச்சப்படுத்தப்படும் என்பதாயிருக்கிறது. மற்ற ஜீவஜந்துக்கள் முதலாம் உலகத்தாரால் அன்பினால் ஆளப்பட, இரண்டாம் உலகத்தாரால் பயத்தால் ஆளப்பட வேண்டியதாயிருக்கின்றன. இரண்டாம் யுகத்துப் பிராணிகள் துஷ்டகுணம் உள்ளவைகளானலொழிய மனிதனைப் பற்றிய அச்சம் வேண்டியதில்லை. மற்றப் பிராணிகள் துஷ்டகுணமடையும் என்பதையே தேவன் இங்ஙனம் குறிப்பாய் வெளியிட்டிருக்கிறார்.

ஓர் பிரபு, ஓர் காரியமாய்த் தன் மனிதனொருவனைத் தூரதேசத்துக் கனுப்புகையில், தன் மனிதனுக்குத் துணையாக இன்னொருமனிதனை அவனுடன் அனுப்ப யோசித்து, தன் மனிதனைப் பார்த்து, 'அந்த மனிதன் உன்னுடன் வருவதால் அவனைபபற்றி நீ அஞ்சவேண்டாம். உன்னைப்பற்றிய அச்சம் அவனுக்கிருக்கும்'' என்று சொன்னால், துணைக்குப் போகிற மனிதன் கொஞ்சம் துஷ்டகுணமுடையவனா யிருக்கவேண்டுமென்பது, பிரபுவின் மனிதனுக்குக் குறிப்பாய் விளங்குமல்லவா? ஆயினும் உன்னைப்பற்றிய அச்சம் அவனுக்கிருக்கும்' என்பதால் பிரபுவின் மனிதன் சற்று தெளிவடைவான். அது போலவே 'உங்களைப்பற்றிய அச்சம் அவைகளுக்கிருக்கும்' எனவே மற்றஜீவஜந்துக்கள் துஷ்டகுணமடையும் என்பது குறிப்பாய் விளங்குகிறது. ஆகையால், ஜீவஜந்துக்கள் ஒன்றுக்கொன்று விரோதம் செய்யும இயல்பையடையப் போகிறதென்பதை, மனிதருக்கு மாமிச பட்சண அனுமதியளிக்கு முன்பே தேவன் குறிப்பாய் வெளியிட்டிருக்கிறாரென்றறிக.

வினா:—மனிதர் மாமிச பட்சணத்தை விட்டுவிட்டால் உலகத்தில் எந்த விதமான நன்மையுண்டாகும்?

விடை:—மனிதர் மாமிசம் சாப்பிடாது நீக்கவே மற்றப் பிராணிகள் இவர்களண்டை பயமில்லாமல் வரக்கூடும். அவைகள் யாவும் மனிதருக்கு அடங்கியிருக்கும். எல்லாப் பிராணிகளையும் ஆண்டு கொள்ளும் சக்தி மனிதருக் குண்டாகும். அப்போது துஷ்டப் பிராணிகள் துஷ்டக்குணங்களை யொழித்துவிடும். மாமிச பட்சணிகளான மிருகங்களும் பறவைகளும்-எந்தப் பிராணிகளையும் கொன்று தின்ன மாட்டாது. விஷஜந்துக்களும் விஷந் தீண்டாது. மனிதர்முதல் எல்லாப் பிராணிகளும் விரோதமில்லாமல் ஒன்றுக்கொன்று சமாதானமாயிருக்கும். இப்படிப்பட்ட சம்பவம் கிறிஸ்துவின் ராஜ்யகாலத்திற்றான் நடைபெறும். 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்று ஜெபிக்கும் கிறிஸ்தவர் (மத் 6: 10) அவர் ராஜ்யப் பெருங்காலத்தில் நடக்கும் சம்பவங்களுக்குத் தக்கதாக, மாமிச பட்சணத்தை யொழிக்கும் குணத்தை யடையாரென்றால் அவர்கள் ஜெபிப்பது பயனுடையதாகும். 'உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக' என்று ஜெபித்தும், தாங்கள் அவர் சித்தத்தைக் கடைப்பிடிக்கா விட்டால் அந்ஜெபம் பலனற்றுப் போவது போலவே, 'உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று ஜெபித்தும், அவருடைய ராஜ்ய காலத்தில நடக்கும் சம்பவங்களுக் கிணங்கத் தமது குணத்தை மாற்றாவிட்டால் இந்ஜெபமும் பலனற்றுப்போகும். 'இருதயத்தில் சுத்த முள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்' [மத் 5.7) [illegible], இருதயத்தில் சுத்த மில்லாதவர்களோ எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவனை தரிசியார். அதுபோலவே கிறிஸ்துவின் ராஜ்ய காலத்திலிருக்க வேண்டிய குணத்தை யடையாதவர் கிறிஸ்துவின் ராஜ்யத்தை எக்காலத்திலும் எவ்விடத்திலும் காணார். ஆகையால், கொல்லாமை, புலாலுண்ணாமை என்பவைகளே கிறிஸ்துவின் ராஜ்யத்தை யழைக்கும் ஜெபமாகவும் கருவியாகவு மிருக்கிறதென்றறிய வேண்டும். அப்படியாகும்போது ஜீவப் பிராணிகளுள் எப்படிப் பட்ட சமாதான மிருக்கு மென்பதைப் பின்வரும் வேதவசனங்களாலு மறிக:—

“அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும்; புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக் கொள்ளும்; கன்றுக் குட்டியும், பால சிங்கமும், ஆனை

யும் ஒரு மித்திருக்கும்; ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான்; பசுவும் கரடியும் கூடி மேயும்; அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்; பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையின் மேல் விளையாடும்; பால் மறந்த பிள்ளைகட்டுவிரியன் புற்றிலே தன்கையை வைக்கும், (ஏசா117—8) ஓநாயும் ஆட்டுக் குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல வைக்கோல் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும். கர்த்தருடைய பர்வதமாகிய கிறிஸ்துவின் ராஜ்யமெங்கும் அவைகள் தீங்கு செய்வது மில்லை; கேடுண்டாக்குவது மில்லை (ஏசா 65: 25) (கிறிஸ்துவின் ராஜ்யமெங்கும்) மனிதரிலும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாரு மில்லை (ஏசா 11 :...அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதிப்பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை (ஏசா 2:4)

இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற விரும்பும் யாவரும் கொல்லாமை புலாலுண்ணாமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதுவே, இச்சம்பவத்திற்காதாரம்.

வினா:—கடவுள் மிருக ஜீவன்கள் விஷயத்தில் கவலையுள்ளவராயிருக்கிறாரா?

விடை—தேவன், இனிமேல் உலகத்தை ஜலத்தால் அழிக்கமாட்டேன் என்று சொன்னதோடு, மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் (ஆதி 9-10) என்று சொல்லியிருப்பதையும், ஓய்வுநாளில் மிருகங்களும் யாதொரு வேலையும் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டிருப்பதையும் (யாத் 20:10), நினிவே அழிக்கப்படாததிற்கு அதிலே அநேக மிருகஜீவன்களுமிருந்தன வென்ற ஒரு முகாந்தரம் (யோனா 3:11) காட்டியிருப்பதையும், அவர்களுக்குக் குரூரம் செய்யக்கூடாதென்று கொடுக்கப்பட்ட உத்தரவையும் (யாத் 23:5,19; உபா 22: 6,7; 25:4), மிருக ஜீவன்களின் இரத்தத்தைப் பலிக்காகவன்றி வேறெதற்குஞ்சிந்தக்கூடாதென்றும், அதைச் சாப்பிடக்கூடாதென்றும் லேவி 17:10—14; ஆதி 9:4) கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருப்பதையும் பார்க்கும் போது அவர் ஏனைய ஜீவ ஜந்துக்கள் பேரிலும் மிகுந்த கவலையுள்ளவராயிருக்கிறார் என்று விளங்குகிறது.

வினா:—மிருகங்களுக்குமாத்மா உண்டா?

விடை:—எண்ணாகமம் 31: 28-இல் 'பிராணி' என்று மொழிபெயர்த்திருக்கிற வார்த்தையும்; ஆதி 1: 20, 21, 24, 30, ஆம் வசனங்களில் ஜீவஜந்துக்கள் என்றும், பிராணிகளென்றும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிற வார்த்தைகளும்; ஆதி 2: 19-இல் ஜீவஜந்து என்று திருப்பப்பட்டிருக்கிற வார்த்தையும்; ஆதி 9: 10, 12, 15, 16-இல் ஜீவஜந்துக்கள் அல்லது, ஜீவன்கள் என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கிற வார்த்தைகளும், 'நேபேஷ்' [Nephesh] என்னும் எபிரேய வார்த்தையே. இந்த வார்த்தையே ஆதி 2:7; எசே 18:24— முதலிய வசனங்களில் 'ஆத்துமா' வென்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால், மிருகங்களுக்கும் ஆத்துமா உண்டென்பது தெளிவாகிறது. (வேதமாணுக்கர் ஐக்கிய சகோதரத்துவப் பத்திரிகையின் '2'-வது வாலியத்தின் '48' ஆம் பக்கங்காண்க)

வினா:—மிருகங்களுக்கு ஆவி உண்டா?

விடை:—அவைகளுக்கு ஆவி உண்டென்று பிரசங்கியின் புஸ்தகம் 3:18—21 இல் தெளிவாய்க் காட்டப் பட்டிருக்கிறது. மாம்சமான எல்லாப் பிராணிகளுக்கும் ஆவியிருக்கிறதென்று எண் 16, 22—இல் சொல்லப்பட்டிருக்கிறது. சங்கீ 104: 30—இல் மிருகங்களும் தேவனுடைய ஆவியைப் பெறுகிறதென்று தெளிவாகிறது. (வே. மா. ஐ. ச. மா. பத்திரிகையின் '2'வது வாலியத்தின் '48' ஆம் பக்கங்காண்க)

வினா:—ஆத்துமா என்றால் என்ன?

விடை:—ஆத்துமாவென்பது சரீரத்திற்குப் புறம்பாயிருக்கக்கூடிய ஒரு ஆள், அல்லது வஸ்துவல்ல. அது சரீரமும் ஆவியும் சேர்வதினால் உண்டாவது (ஆதி 2:7) ஆவி சரீரத்தைவிட்டுப்பிரிந்தவுடனே ஆத்துமா மரித்துப்போகிறது; அல்லது இல்லாமற் போகிறது. ஒரு விளக்குத்திரி எப்படி ஆகாயத்தோடு சேர்ந்து வெளிச்சத்தைப் பிறப்பிக்கிறதோ அப்படியே சரீரமும் ஆவியும் சேர்வதினால் ஆத்துமா ஏற்படுகிறது. ஆகாயம் வராமல் தடுக்கப்படும்போது எப்படி வெளிச்சம் இல்லாமற் போகிறதோ அப்படியே [illegible]வி சரீரத்தோடு சம்பந்தப்படாதபோது ஆத்துமா இல்லாமற்போகிறது. (வே. மா. ஐ. ச. மா. பத்திரிகையின் '2'வது வாலியத்தின் '48' ஆம் பக்கங்காண்க)

வினா:—அப்படியானால் மனிதரை மாத்திரமல்ல மற்றப் பிராணிகளைக் கொல்வதும் 'கொலை பாதகம்' என்ற தோஷந்தானோ?

விடை:—மற்ற ஜீவஜந்துக்களை விட தேகவமைப்பிலும், மனோவல்லமையிலும் தேவசாயலிலும் (ஆதி 9:6) தான மனிதர் சிறந்தவர்களே யொழிய வேறு வகையில் சிறந்தவர்கள் அல்ல வாகையாலும், 1யோவான் 3: 5-இல் மனுஷ கொலைபாதகம் சற்று உயர்வாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதாகையாலும் மனிதரைக் கொல்வதைவிட ஏனைய ஜீவஜந்துக்களைக் கொ

ல்வது, மனிதகொலை பாதகத்திலும் சற்றுத்தாழ்ந்த கொலைபாதகமே யொழிய கொலைபாதக மில்லையென்றுசொல்ல வொண்ணாது.

ஒன்று மில்லாத ஏழையையாவது, அறிவில்லாமல் வைத்தியங் கொண்டு திரியும் பேதையையாவது கொல்வதற்கும் மிகுந்த ஐசுவரியமுள்ள அரசனையாவது, கல்வியில் தேர்ந்த வித்வானையாவது கொல்வதற்கும் பேதம் எவ்வள வுள்ளதோ அவ்வளவே மனித கொலைக்கும், ஏனைய ஜீவஜந்துக்களைக் கொல்லும் கொலைக்கும் மனிதனென்றால் குகையில் வசிக்கும் மிருகம் போன்ற மனிதனையும், நீரில் வசிக்கும் மச்சம் போன்ற நீர் மனிதனையும் ஒப்ப நோக்குவதே சிறந்த நீதியாகும். ஆடு, மாடு, நாய், பூனை, குரங்கு போன்ற மிருகங்கள் முந்திய விருவகை மனிதரைவிடத் தாழ்ந்தவைகளல்ல. தாழ்ந்தே யிருந்தாலும் கொலைசெய்வது தோஷமே யாகும்.

வினா:—பிராணிகளைக் கொன்று மாமிச பட்சணம் செய்வது தோஷமென்றும், அதனால் தீங்கு விளையுமென்றும் தமக்குத் தெரிந்திருந்தும் அவற்றைச் செய்யத் தேவன் ஏன் இடங் கொடுத்தார்?

விடை:—"சிறுமைப் பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்...(சங் 41:1) இரக்க முள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவார்கள் [மத் 5:8] மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா [அதாவது கடவுள்] உங்கள் தப்பிதங்களையும் மன்னியா திருப்பார் (மத் 6:15......இரக்கமில்லாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத் தீர்ப்புக்கிடைக்கும் [யாக் 2:13]" என்ற சத்தியங்கள் மோசேத் தீர்க்கதரிசிக்குத் தெரிந்திருந்தும், மனைவியைத் தள்ளிவிட எண்ணிய யூதருக்குத் தனித்தனியே இச்சத்தியங்களைப் போதித்தும் கேளாமல் அவர்கள் மனக்கடினம் பண்ணினபோது, 'இரக்கமில்லாதவர்களுக்கு இரக்கமில்லாத நியாயத் தீர்ப்புங் கிடைக்கும்' என்ற சத்தியத்தை அவர்களே அனுபவத்தில் அறிந்து கொள்ளட்டுமே என்று எண்ணி, தள்ளுதற் சீட்டைக்கொடுத்து மனைவியைத்தள்ளிவிடலாம் என்ற அனுமதி கொடுத்தது எப்படியோ அப்படியே, ஆண்டவரும் மாமிச பட்சணம் செய்வதால் வரும் தீங்கை அறிந்திருந்தும் மனிதர் அதை மிக வாஞ்சையாய் விரும்பியபடியால், அதால் வரும் தீங்கை அவர்களே அனுபவத்தில் அறிந்துகொள்ளட்டுமென் றெண்ணி மாம்ச பட்சணானுமதியளித்தார்.

'பாலாக்' என்னும் மோவாபியரின் ராஜா இஸ்ரவேலரைச் சபிக்கும்படி, 'பிலேயாம்' என்பவனுக்குக் கூலி பேசி, அவனை யழைத்தபோது, பிலேயாம் கூலிக்கு [ஆசைப்பட்டு யூதா 11வச], அவ்விதம் செய்ய மன மிசைந்து கர்த்தரிடம் பல தடவை கேட்டபடியால், தாம், அதைச்செய்ய அனுமதியளிக்க மனமில்லாமலிருந்தும், அவன் மனம் அவ்வழியில் சாய்ந்து விட்டதென்றுணர்ந்து, முதல் தடவை 'போகவும் வேண்டாம் அவர்களைச் சபிக்கவும் வேண்டாம்' [எண் 22:12] என்று சொன்னவர், மறுபடியும் அவன் தன் மனவாஞ்சையை நிறைவேற்றக் கேட்டபடியால் 'போகலாம்—ஆனால் என் மனப்படி தான் செய்ய வேண்டும்' [எண் 22:20] என்று சொல்லிவிட்டு, அவன் போகும் வழியில் எதிராய்ப்போய் மறித்து 'உன் வழி எனக்கு மாறுபாடா யிருக்கிறதினால் நான் உனக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன்' [எண் 22 32] என்று பயமுறுத்தி, பின்னும் அவன் தன் கூலி ஆசையை வெறுக்காமல் 'உமது பார்வைக்கு இது தகாததாயிருக்குமானால் நான் திரும்பிப்போய் விடுகிறேன்' [எண் 22:34] என்று சொல்லித் தன் மன நோக்கத்தைக் குறிப்பாய்க் காட்டினபடியால் அவனை மனம்போல் போய் தமது சித்தத்தை அறியட்டுமென விட்டுவிட்டார். இந்த விஷயத்தில் நாம் தீர்ப்பதெப்படி? பிலேயாம் செய்ய நினைத்தது சரியென்று இடங் கொடுத்தார், அல்லது அவன் கெட்டுப் போகட்டும் என்று இடங்கொடுத்தாரா? இரண்டுவகையிலுமல்ல ஆனால் அனுபவத்தில் அறியட்டும் என்றே இடங் கொடுத்தார் கர்த்தர் இடங்கொடுத்ததால் இவன் செய்கை தோஷமில்லையென்று சொல்லலாமோ? இவன் செய்கையைக் 'கூலிக்காகச் செய்த வஞ்சகம்' என்று [யூதா 11 வச] யூதா அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

இவன் விஷயத்தில் கர்த்தர் படிப்படியாய் இடங் கொடுத்தாலும், அவன் செய்கை தீய தென்றும், அதை அனுபவத்தில் அறியட்டுமென்றும் செய்ததை நாம் அறிந்தது போலவே, பட்சணம் செய்வது தோஷமென்று தாம் அறிந்தும் அதால் வருந்தீங்கை மனிதர் அனுபவத்தால் அறியட்டுமென்று அவர் இடங் கொடுத்ததாக நாம் நிச்சயமாய் அறியவேண்டும். ('பலி, மாம்ச பட்சணம் என்பவைகளைப் பற்றிய, பைபிளின் உட்கருத்து' என்ற விஷயம்—அனுபந்தம் B. என்பதில் வெளிவரும்.]

## நகரமும் நகரத்திற்குவேண்டிய வெளியிடங்களும்.

பூவுலகில் மனிதர்களால் நிர்மாணம் செய்யப்பட்டவைகளில் முக்கியமானது நகரமாம். நகரமென்பது முற்றும் மனிதர்கள் ஒழுங்குபடுத்தி ஏற்படுத்தியதே யல்லது வேறன்று. முற்காலத்தில் நகரங்கள் அத்தனையாகச் சீர்திருத்தமாய்க் கட்டப்படவில்லை. மலையாயிருந்தால் அம்மலையை அசைக்கமுடியாமல் அதன் மேலும் பட்டணம் கட்டினார்கள்; ஆழமான பள்ளமாயிருந்தாலும் அதற்குள்ளும் பட்டணம் ஏற்படுத்தினார்கள். அக்காலத்தில் வீதி முதலான இடங்களில் விழுந்த குப்பை கூளம், எச்சில், அழுக்கு முதலானவைகளை எடுப்பாரில்லை; எத்தனை நாளானாலும் அப்படியே கிடக்கவேண்டியதுதான். மழை பெய்து அடித்துக்கொண்டு போனாலொழிய அவற்றிற்கு வேறுபோக்கில்லை. அதனாலேயே பட்டணமென்றால் மிகவும் அசுத்தமான இடமென்றே நாளதுவரையிலும் ஒரு அபவாதம் உண்டாயிருக்கிறது. அக்காலத்தில் அவனவனுக்குத் தோன்றியபடியே ஒவ்வொரு மனிதனும் வீடு கட்டுவான். தனிகனான ஒருவன் ஒரு பெரிய மாளிகை கட்டினால் அதன்பக்கத்தில் எளியவன் ஒருவன் ஒரு குடிசை கட்டுவான். இப்படியாக ஆதியில் நகரம் சீர்திருத்தமில்லாமலே யிருந்தது. காலக்கிரமத்திலே நகரங்கள் ஏற்படுத்துமுறை மாறுபடலாயிற்று. நகர ஏற்பாடு செய்பவர்கள் இரண்டு வகையாகப் பிரிந்தார்கள். அதில் முதல் வகுப்பினர் கொள்கையாவது, ஈசுவர சிருஷ்டியில் எது எப்படியிருக்கிறதோ அப்படியே இருக்கவேண்டும்; அவற்றை நாம் மாற்றலாகாது; நாம் செய்யும் ஒழுங்குபாட்டினால் ஆவதொன்றுமில்லை. நன்மையோ தீமையோ வரவேண்டியிருந்தால் வருகுவது தானே வரும்; அவற்றை வரவொட்டாமல் தடுக்க நம்மாலாகுமா; நகர பரிபாலன சபை என்பது ஒன்று வேண்டவே வேண்டாம்; மனிதன் பூமியில் என்றைக்குப் பிறந்தானோ அன்றே அவனுடன் நோயும் மரணமும் கூடப்பிறந்தன. ஆதலால் பழைய நகரங்கள் பழையமாதிரியாகவே யிருக்கட்டுமென்கிறார்கள்.

அவர்களுக்கு எதிர்க்கக்ஷியான மற்றவர்களுடைய கொள்கையோ, அப்படிப்பட்டதன்று. ஓரிடத்திற்கு அழகு, சௌக்கியம், பத்திரம், ஒழுங்கு முதலிய எல்லாம் தப்பாமல் கூடியவளவு பாடுபட்டு மனிதர்கள் உண்டாக்கத்தக்கவை. தெய்வத்தாலாகாதெனினு முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும். இயற்கையில் மனித சஞ்சாரத்திற்கு அசௌக்கியமிருந்தால் அதை நிறுத்தவேண்டுவது அவசியமே. நகரத்து நடுவே மலைமேடுகள் தடையாயிருந்தால் அவற்றை யிடித்து அப்புறப்படுத்தித் தரையைச் சமப்படுத்த வேண்டும்; பள்ளங்களிருந்தால் தூர்த்துவிடவேண்டும். வீடுகள் செவ்வையாகக் கட்டப்படாவிட்டாலும் தெருக்கள் நெருக்கமாயிருந்தாலும் அவைகளை மாற்றவேண்டும். சிங்காரத்தோட்டங்களும் வனங்களும் இல்லாவிட்டால் தகுந்த இடத்தில் ஏற்படுத்தவேண்டும். சாலைகளில் மரங்களில்லாவிட்டால் நட்டுப் பயிராக்கவேண்டும். நகரத்தில் நல்லதண்ணீர் கிடைக்காவிட்டால் தூரத்திலுள்ள ஆறு, ஏரி முதலியவற்றிலிருந்து தண்ணீர் வரும்படி செய்யவேண்டும். இன்னும் இவைபோன்ற நன்மைகள் பலவும் மனிதர்கள் செய்விக்கத் தக்கவையென்பது அவர்களுடைய கொள்கை. அப்படி எப்புறத்திலும் ஒழுங்காகப் பாதைகள் ஏற்பட்டுக் குளிர்ச்சியான வீதிகளில் நினைத்தவிடமெல்லாம் தண்ணீர்க் குழாய்களும், அலங்காரங்களும், இரவில் இருளைப்போக்கிப் பகல்போலப் பிரகாசம் தருகிற பல தீபங்களும் பின்னும் பலவிதமான சௌக்கியமுமமைந்த நகரங்களில் வாழ்கின்ற வாழ்க்கையே மிகச்சிறந்த வாழ்க்கையென்று கல்வியில் தேர்ந்த கனவான்கள் பலரும் அங்கீகரித்திருக்கின்றார்கள். நகரவிசாரணைச் சங்கத்தாருடைய ஏற்பாடுகளுக்கும் அதிகாரிகளுடைய ஆலோசனை முதலியவற்றிற்கும் யாவரும் சம்மதித்து அதன்படி நடக்க உடன்

படுவார்களானால் எல்லா நகரங்களும் இத்தன்மையான சிறந்த நிலைமைக்கு வருமென்பதற்கு சந்தேகமில்லை.

இவ்விதமான பெரிய பட்டணங்களில் பிரஜைகளின் சவுக்கியத்திற்கு முக்கியமாக வேண்டியவை விசாலமான வெளியிடங்கள். அப்படிப்பட்ட வெளியிடங்கள் இல்லாமையாலே தான் பலவிதமான நோய்களும் துன்பங்களுமுண்டாகின்றன. வீட்டுக்குள் சிறிதுநேரம் அடைப்பட்டிருந்தால் அந்தத்துன்பம் பொறுக்கமுடியாமல் பலர் வெளியே போய் உலாவி வரும்படி புறப்படுகிறார்களல்லவா? நகரத்திலே சிலகாலம் வசித்தவர்கள் தேகம் அசௌக்கியமடைந்து மறுபடி சௌக்கியமுண்டாக அந்த நகரத்தை விட்டுக் கொஞ்சகாலம் நாட்டில் போய் வசிப்பதற்கு விரும்புகிறார்களல்லவா? இவற்றிற்கெல்லாம் காரணம் நகரவாஸத்திலுள்ள குறைவுதானே. எப்படிப் பட்டவர்களுக்கும் எந்தக்காலத்திலும் எந்த விடத்திலும் உயிர்வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரமாயிருப்பது பரிசுத்தமானகாற்று என்பது இக்காலத்தில் எல்லாருக்கும் வெகுவாய்த் தெரிந்திருக்கலாமல்லவா? மத்தியில் வெளியிடமேயில்லாமல் வீடுகள் மிகவும் அடர்த்தியாயிருக்குமிடங்களில் இந்த நல்ல காற்று கிடைப்பது மிகவும் அருமை. பலர் பலதரம் மூச்சுவிட்ட அசுத்தமான காற்றும் சாக்கடை முதலியவற்றின் அழுக்குகள் கலந்த தீயகாற்றுமே மிகுதியாய் அவ்விடங்களில் உலாவும். அதுதான் நோய்களுக்கு நாற்றங்கால். ஆனதுபற்றி அவ்வகையான தீய வாயுவை அப்புறப்படுத்த வேண்டுவது அவசியம். அதற்கு ஏற்ற உபாயம் வேண்டுமளவு வெளியிடங்களமைப்பதுதான். இதுவிஷயத்தில் முதல் முதல் செய்யவேண்டிய காரியம் வீதிகளை விசாலப்படுத்துவதும், சந்து பொந்துகளிருந்தால் அவற்றை இடித்து பெரிய வீதிகளாக்குவதுமேயாம். வீதிகள் விசாலமாயிருந்தால் வெளியிலிருந்து நல்ல காற்று தாராளமாக அவ்வீதிகளில் வீசி அங்குள்ள தீயகாற்றுக்களை அப்புறப்படுத்தி மிகுந்தநன்மை உண்டாக்கும்; நெருக்கமாயிருந்தால் அங்கே அத்தனை தாராளமாகக் காற்று சஞ்சரிக்காது. சந்துகளும் மூலைமுடக்குகளும் தீயகாற்று தங்குவதற்கு இடம். ஆகலால் இவற்றைச் சீர்ப்படுத்த வேண்டுவது முதன்மையான காரியம்.

பிரஜைகளின் சௌக்கியத்திற்கு இவ்வளவுமாத்திரமே போதாது. வீடு தொழிற்சாலை முதலிய விடங்களில் வேலை செய்து அலுத்தவர்கள் சிறிது நேரம்போய் உலாவி இளைப்பாறிவர வெளியிடங்கள் அவசியமானவை. அந்தந்த விடங்களிலுள்ள பிரஜைகளின் அளவுக்குத் தக்கபடி வெளியிடங்கள் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட வெளியிடங்கள் மிகுதியாயிருந்தால் நாடுகளுக்குப் போகவேண்டுமென்கிற விருப்பம் வெகுவாகக் குறைந்துபோம். நாடுகளில் கிடைக்கும் நல்ல காற்றும் கண்குளிர்ந்த காட்சியும் நாமிருக்குமிடத்தே கிடைப்பதானால் தேசாந்தர யாத்திரையின் வருத்தத்தை விரும்புவானேன். ஆயினும் நீர் நிலம் காற்று இவை அடிக்கடி மாறுவதும் தேசத்திற்கு ஒருவிதமான சௌக்கியம் தருமாதலால், நகரவாசம் செய்பவர்கள் ஒவ்வொரு காலங்களில் நாட்டுப்புறம் போய்வருவதும் நன்மைதான். அதுவேயன்றி, நகரவாசத்தினால் நோயாளியாகி அதற்காக நாட்டுக்குப்போய்க் குணப்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதிராது.

மேலும் நகரங்களின் சுற்றுப்புறங்கள் அசுத்தமான விடமாயிராமல் மரம் செடி முதலியவை அடர்ந்த காடுகளாயாவது தோட்டங்களாயாவது இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வெளியிலிருந்துவருகிற காற்று அத்தனையும் அசுத்தமானதாகி நகரத்து ஜனங்களுக்குக் கொடியவிஷமாகிவிடும். அப்படிப்பட்ட காற்றுத்தான் பலவகைக் கொள்ளை நோய்களை உண்டாக்குவது. ஆகலால் பட்டணத்தையடுத்த பேட்டை முதலிய விடங்களில் மிகுதியாய்க் குடிகள் அடரும்படி செய்யலாகாது. அதற்குப் பிரதியாக நகரத்திற்குள் அடர்ந்து நெருங்கி வருந்தும் பிரஜைகளை அவ்விடம்விட்டு அடுத்தபேட்டைகளில்போய் வசிக்கச் செய்தால் அது மிகுந்த நன்மையேயாம். இப்படியாக

நகரத்தைச்சுற்றி, நாடுகளும் காடுகளும் அமைந்த நன்னிலங்களும், நகரத்திற்குள் அங்கங்கே அழகிய சிங்காரத் தோட்டங்களும் விசாலமான சாலைகளும் சோலைகளும் அமைந்து குடியிருப்பு வீடுகளும் நல்லகாற்று உலாவுதற்கு ஏற்றவகை கட்டப்பட்டிருந்தால் அவ்விதமான வீடுகளில் வாழும் நகரவாழ்க்கை மிகச் சிறந்தவாழ்க்கையேயாம். அவரவர் தமது வீட்டிற்குள்ளேயே தமது சிறுவர்களுடன் தாம் உலாவுவதற்கு அழகிய செடிகொடிகளமைந்த சிறிய தோட்டமொன்று அமைத்துக்கொள்வாராயின் அதற்கிணை வேறொன்றுமில்லை.

இச்சென்னைமாநகரே இப்பொழுது சீர்திருத்தம் பெற்றுவரும் நகரத்திற்கு ஒரு பெரிய திருஷ்டாந்தமாயிருக்கிறது. இந்நகர விசாரணைச் சபையார் நெருக்கமாயுள்ள இடங்களில் வீதிகளை விசாலப்படுத்தி வருகிறார்கள். தண்ணீர்க்குக் குறைவில்லாமல் வெகுதூரத்தி லிருந்து வீதிகள்தோறும் வீடுகள் தோறும்குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டுவிட்டு, வீதிகளிலும் சாக்கடைகளிலும் சிறிதும் அழுக்குத் தங்கவொட்டாமல் சுத்தி செய்து வருகிறார்கள். நாற்சந்திகளிலும் வீதிகள் ஒன்றாய்க் கூடும் மத்திய ஸ்தானங்களிலும் சொற்ப நிலமிருந்தாலும் அங்கே ஒரு குழாய்கட்டி அதைச் சுற்றி அழகாய்ச் செடி கொடிகள் அமைத்து இனியகாட்சி யுண்டாக்குகிறார்கள். பீபில்ஸ் பார்க், நேபியர்ஸ்பார்க் முதலான பெரிய சிங்காரத் தோட்டங்களும் அங்கங்கே யிருக்கின்றன. இவை முதலான சுகாதாரங்கள் அமைந்திருப்பதினாலேயே, பிரஜைகள் விசேஷமாக அடர்ந்திருந்தாலும், இந்த க்ஷாமகாலத்தில் உண்டாகிற பல கொடியநோய்கள் இங்கே விசேஷமாகப் பொல்லாங்கு விளைவிக்காமல் ஒதுங்கிவிடுகின்றன. இந்நகர விசாரணைச் சபை இவ்வளவோடு நிற்காமல் நகரபரிபாலனத்திற்குரிய பின்னும் பலவிதமான நன்மைகளையும் தேடிக் குடிகளுக்கு மேன்மேலும் மிகுந்த சௌக்கிய முண்டாக்குவார்களென்று நம்புகிறோம்.

இப்பொழுது உலகத்திலுள்ள நகரங்கள் பலவற்றிற்கும் தாய் நகரமென்று சொல்லும்படி அத்தனைச் சிறப்புற்றோங்கி விளங்குகின்ற லண்டன்மாநகரம் முதலிய மகாநகரங்கள் அடங்கிய இங்கிலாந்து தேசம் 200 வருஷத்திற்கு முன்னே சிறிதும் சீர்திருத்தமில்லாத தேசமாகவேயிருந்தது. பிற்காலத்தில் பிரஜைகள் விருத்தியாக, அவர்கள் அங்கங்கே குடியிருக்க நகரங்கள் ஏற்படுத்திக்கொண்டு வியாபாரங்களும் விசேஷமாக நடத்த ஆரம்பித்து வெளியாயிருந்த இடமெல்லாம் வீடுகளும், மாளிகைகளும், தொழிற்சாலைகளும் கட்டிக்கொள்ள ஆரம்பித்தார்கள். மூலைக்குமூலை இருப்புப் பாதை வண்டிகள் ஓடத்தொடங்கின. அந்நகரங்களில் நாளளவிலே குடிகள் அதிகமாய் அடர்ந்துபோய் வெளியிடங்கள் விசேஷமாக வேண்டுமென்கிற கூச்சலுண்டாயிற்று. பிறகு அதற்காகப் பலசபையார் ஏற்பட்டுச் சட்டங்களும் அநேக முண்டாயின. அவர்களால் பரிபாலிக்கப்பட்டு அந்நகரங்கள் இப்பொழுது தமக்கு இணை உலகில் எங்குமில்லையென்று சொல்லும்படிச் சீர்பெற்று விளங்குகின்றன. ஆகலால் இவ்விதமாகவே ஒவ்வோரிடத்திலும் சபையார் ஏற்பட்டுப் பிரஜைகளின் சௌக்கியத்திற்கு வேண்டிய நன்மைகளைத் தேடி எல்கும் துன்பம் விளைவதற்கு இடமில்லாம செய்து வருவார்களென்று நம்புகிறோம்.

"உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வண்மையு முண்டோ உலகறியப்
பான்முளை தின்று மறலியுயிர் குடித்த
கான் முளையே சான்றுங் கரி.

---

☞ * க்ஷத்திரியன். *

தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கொஞ்சங் காப்பிகளே கையிருப்பு.

## சாஸனப் பத்திரம்.

சாலிவாகன சகார்த்தம் ௲௭௱௪௰௨க்கு (1742) க்குமேல் செல்லாய்நின்ற கொல்லம் ௯௱௯௰௪ (994) புரட்டாசிமீ ௴ (18) உ கீழ வேம்புநாட்டில் திருநெல்வேலி கல்லத்திமுடுக்குத்தெரு யீசுரமூர்த்தியா பிள்ளையவர்களுக்கு திருவழுதி வழநாடு தெந்திருப்பேரை சேகரம் புரையூர் அழகப்ப நாடான் மகன் நல்லதம்பி நாடான் என் விளைபனை, வாரம் விலைக்கிரய சாதனம் எழுதிக்குடுத்தபடி இத்தநாள் தங்களுக்கு எண்ணி தான விளையும் பனையும் வித்த நிலத்துக்கு எல்லை. கீழ எல்லை கருத்தனாஞ்சான் விளைக்கும் தென்வடலோடிய இடுவைப் பிலாத்துக்கு மேற்கு, தென்னெல்லை கணியான்வடலிவிளைக்கு வடக்கு, மேல எல்லை கடம்பாக்குளம் நீர்பிடிக்கும் கச்சினாவிளை ஒழுகுபனைக்கும் கிழக்கு, வடஎல்லை கெங்க ஆதிச்சநாடான் விளைக்கும், ஆத்தங்கரையான் விளைக்கும் தெற்கு ஆக இந்நான்கெல்லைக்குள்பட்ட விளையும் பனையும் வாரமும் விலைக்கிரயசாதனம் பண்ணிக்கொடுத்து வாங்கினது என் தனது வியாச்சிய கோட்டுச் செலவுக்காகவும் தனது படிச்செலவுக்காகவும் தாங்கள் தந்து நான் வாங்கிக்கொண்டதுகலிப்பொன் ௫௰௫ (55) பணம் ௫ (5) அன்பத்தஞ்சி பொன்னும் அஞ்சுபணமும் தாங்கள் தந்து நான் ரொக்கம் பத்திக்கொண்ட படியினாலே இந்த விளையும் பனையும் வாரமும் இதிலுள்ள கீழ்நோக்கிய கிணறும் மேல்நோக்கிய மரமும் நிதிநிச்சேப சிலதருபாசனம் ஆச்சின்னிய ஆகாமிய மென்றுஞ் சொல்லப்பட்ட அஷ்டலோக தேச சுவாமியங்களுக்கும் தானாதி வினிவிக்கிரயங்களுக்கும் தாங்களே யோக்கியராக ஆண்டனுபவித்துக் கொள்ளுவீர்களாகவும் இப்படிக்குச் சம்மதித்து விளையும் பனையும் வாரமும் விலைக்கிரய சாதன எழுதிக்குடுத்தேன் நல்லதம்பி நாடான் யீசுரமூர்த்தியா பிள்ளை யவர்களுக்கு இந்த விளையில் குடியேறினால் மனைவரி தொழுவரி சிலவுவரி உள்ளதும் தாங்களே கைபாடிக்கொள்வீர்களாகவும் இந்த அன்பத்தஞ்சி பொன்னு மஞ்சுபணத்துக்கும் இதுவே பணப்பத்து சீட்டாகவும் விலைக்கிரய சாதனமாகவும் கட்டிக்கொள்ளுவார்களாகவும் — இந்த தற்குறி நல்லதம்பி நாடானென்று எழுதியிருக்குது. சாக்ஷி குப்பாறுக்கு பிள்ளை யென்று கையெழுத்து எழுதியிருக்குது.—இந்த தற்குறி பிச்சன்பண்டாரம் மென்று யெழுதியிருக்குது. இப்படிக்கு அறிவேன் திருநெல்வேலி கிழக்கெருவிலிருக்கும் திருச்சித்தம்பலம் பிள்ளை யென்று கையெழுத்து எழுதியிருக்குது.

இந்த கிரயசாதனம் யெழுதினேன் திருநெல்வேலி அறம்வளர்த்தநாத முதலியார் கையெழுத்தென்று கையெழுத்து எழுதியிருக்குது.

சரியான கடுதாசி 1826-ம் வருஷத்து நெம்பர் 374-ல் வாதிபக்கம் தஸ்தாவேசு பி அடையாளம் 1827-ம் வருஷம் ஜனவரிமீ 29உ தாக்கல் பண்ணப்பட்டது.

சிதாறுமையர், முனிசிபு.

என்று எழுதியிருக்குது.

முகர் பிலாத்து குமாஸ்தா சிவகாமிநாத பிள்ளை. இந்த தஸ்தாவேசு நகலுக்கு 1827-ம் வருஷம் மார்ச்சிமீ 5உயில் நெல்லையம்பலத்து குடி. முனிசிபு கச்சேரியிலிருந்து ஷை கச்சேரி 1826-ம் வருஷத்து நெம்பர் 374 வக்கில் பிரமநாயகம் பிள்ளைக்கு குடுக்கப்பட்டது.

அசலுக்குச் சரியான நகல் சிதாறுமையர்
(பின்புறம்) முனிசிபு.

1826-ம் வருஷத்து நிம்பர் 374-ல் வாதி பக்கம் 3-வது சாட்சிக்காரனால் தாக்கல் செய்த தஸ்தாவேசு பி. அடையாளம் லக்கம் 12யென்று எழுதியிருக்குது.

குறிப்பு:—இந்த தஸ்தாவேஜ் இன்றைக்கு 106-வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டு, 99-வருஷங்களுக்கு முன்பு கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு 8-அணா முத்திரைக் கடுதாசியில் கோர்ட்டு முகரும், கோர்ட்டார் கையொப்பத்துடனும் கொடுக்கப்பட்ட நகலைப்பார்த்து சரி

பாய் எழுதியது. இதன் அசலும் மற்றும் பல பூர்விக ரிக்கார்டுகளும் கச்சினுவிளை கிராமப் பஞ்சாயத் பிரஸிடெண்டு ஸ்ரீமான் தா. வெ. வெள்ளைய நாடாரவர்களிடமிருக்கின்றன.

## தென்தமிழ்த் தனியாட்சி.

(ஸ்ரீமத் த. கைலாச பிள்ளையவர்கள் இந்துசாதனத்தில் எழுதியது.)

"ஆரியமுந் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால்-ஆரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து."

—வண்ணக்கஞ்சாத்தனார்.

1. தமிழ்ப்பாஷைக்கு இயல்பிலே ஓரளவுக்குப் பெருமையிருக்கவும், இப்பொழுது பத்திராதிபர்மார் சிலர் அதற்கு இல்லாத சில பெருமைகளைக் கற்பித்து உள்ள பெருமையையுங் கெடுக்கிறார்கள். இவருள், சிலர் தமிழ்நாடாகிய பாண்டிநாடே ஆதிமனிதர் முதல் உற்பத்தியான இடமென்றும், சிலர் தமிழே முதற் பாஷையென்றும், சிலர் இப்பொழுது சிவாக்கிரயோகி ஞானப்பிரகாசசுவாமி முதலானோரால் பாஷ்யங்கள் செய்யப்பெற்று விளங்கும் வடமொழிச் சிவஞானபோதமும் வேதசிவாகமங்களும் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டனவென்றும் சொல்லுகிறார்கள். அப்படியிருக்கக்கூடாதோ இருந்தாலென்னவெனில்; அது உண்மையானால் நல்லது, பொய்யானால் ஆகாது. உண்மையோ வென்பதை ஆராய்வோம். இப்படிச் சொல்லுபவர்கள் சில ஐரோப்பிய பண்டிதர்க ளெழுதிய Geology Aseronomy, Anthropology Philology, ஆகிய நூல்களையே தமக்குப் பிரமாணமாக எடுத்துக் காட்டுகிறார்கள். இவர்கள் தாமாக மண்ணிற் புகுந்தாவது விண்ணிற் பறந்தாவது இவைகளுள் ஒன்றையும் கண்டவர்களல்லர். நானும் அவ்வைரோப்பிய பண்டிதர் எழுதியவைகளையும் நம்மவர் சிலர் எழுதியவைகளையும் எடுத்துக் காட்டிச் சில சொல்லுகின்றேன். இவருட் சிலர் சில பிராமணர்மேற் கொண்ட கோபத்தினாலே வேதசிவாகமங்களையும் வேறு விகலையும் இகழுகிறார்கள். ஆரியரென்ற சொல்லைக் கேட்டாலும் இவர்களுக்குக் கேட்டு முட்டு. இவர்களுள் ஒருவர் சிவஞானசித்தியாரைத் தமிழ்நூலென்று எற்றுக்கொண்டார். எற்றும், அந்தச் சிவஞானசித்தியாரிலேயே 'ஆரியன் குலாலனைப் போன்று ஆந்தவன் அகிலமெல்லாம்' 'ஆரியனுமாசான் வந்தருளாற்றேன்றும்' எனறும், தேவாரத்தில் 'ஆரியன்கண்டாய்' என்றும் அருளப்பட்டிருத்தலை மதிக்கின்றிலர். இவர்கள் இந்தியாவுக்குச் சுவராச்சியம் வந்தால் தாங்கள் ஆரியப்பிராமணருக்கு அடிமைப்படல் வேண்டுமென்று பயந்து சுவராச்சியம் வேண்டாமென்கிறார்கள். அதுமாத்திரமா சாதிபேதமில்லையென்றுஞ் சொல்லுகிறார்கள். இங்கிலீஷ்காரர் தாங்களும் ஆரியரென்று சொல்ல, அதையும் ஒத்துக்கொண்டு இங்கிலீஷ் ஆரியருக்குக் கீழே இருப்போம் இந்திய ஆரியருக்குக் கீழே இருக்கமாட்டோம் என்கிறார்கள். கல்வியறிவில்லாத சில ஜனங்கள், இவர்களுடைய இந்த வீண் பேச்சை நம்பி பிதாமாதாக்களுக்குச் செய்யவேண்டிய அந்தியேட்டி சபிண்டீகரணம் ஆப்திகம் அமாவாசை விரதம் முதலானவை பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினென் கீழ்க்கணக்கு முதலிய தமிழ்நூல்களில் விதிக்கப்படாமையால், அவைகளைச் செய்கிறதில்லையென்று சொல்லி விடுகிறார்கள். சிலர் ஆசௌசம் என்றொன்று இல்லை என்கிறார்கள். சிலர் சாதியென்றொன்றில்லையென்கிறார்கள்; சிலர் கங்கா ஸ்நானத்தை அவமதிக்கின்றார்கள்; சிலர் 'கடைசியிற் பார்த்தால் எல்லாம் மனுஷருடைய கட்டு' என்று சொல்லிச் சமயவிசுவாசங் கெட்டவராகிறார்கள். இவைதாம் இவர்களால் விளைந்த பலன்கள்.

2. இவருள்ளும் பல கட்சிகளுண்டு. சிலர் எல்லாச் சாத்திரங்களும் தெற்கே பாண்டி நாட்டிலே உதித்தன என்பர்; சிலர் அவை

வடக்கேயிருந்து வந்தனவென்பர்; சிலர் இச்சாத்திரங்களெல்லாம் தமிழிலிருந்து சம்ஸ்கிருதத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டனவென்பர்; சிலர் புராணங்களும் இதிகாசங்களும் மிருதிகளும் ஆரியருடைய கட்டு என்பர்; சிலர் வேதஆகமங்களும் அவர்கள் கட்டியன என்பர்; சிலர் பிராமணரெனப்பட்டவரெல்லாம் ஆரியரென்று விலக்குவர்; சிலர் ஆதிசைவப்பிராமணர்மாத்திரம் ஆரியரல்லரென்று கொள்வர். இவர்கள் ஒருவரோடொருவர் மாறுபடுகிறது மாத்திரமன்றி. ஒவ்வொருவரும் தாமே முன்னொடு பின் மாறுபடச்சொல்லி எடுத்த விஷயத்தைத் தாபிக்க முடியாமல் தத்தளிக்கின்றார்கள்.

3. ஒருவர் "ஆசிய உலகில் நடுக்கோட்டுப் பகுதிய Equitorial regions 'முதலில் நிலமாய்ப் பாங்கு அமைந்தது' 'இவ்வாறு முதலிற் குளிர்ந்த பகுதியிற்றான் தமிழகமுள்ளது. எனவே, தமிழகமானது உயிர்த்தொகை தோன்றற்கேற்ற வசதிகள் முதல் முதல் வாய்க்கப்பெற்ற பகுதியிலுள்ள தென்பது விளங்கும்" என்றார். மற்றொருவர் "முதற்கண் மக்கள் தோன்றி வாழ்வமைந்திருந்தது பாண்டிநாடுதான்' என்றும் "இவ்வினம் மக்கட்படையிற்கும் அவர்கள் உயர்நலவாழ்விற்கும் இடமாக இருந்த நிலத்தே வழங்கிய மொழி தமிழே" என்றும் கூறினர். இவரே விந்தியமலைக்கு (இதற்குத் தமிழ்ச்சொல் இல்லைபோலும்) வடக்கே பனிமலை வரையும் பரவியுள்ள நிலப்பகுதியின் பெரும்பாகம் கடலுள் மூழ்கியிருந்த காலத்தே தென்னாடு நிலப்பரப்பாக இருந்ததெனவும் பனிமலையினும் பொதியின்மலை மிக்க முதுமையுடைத்து எனவுங் கேட்கின்றோம்" எனவும் "தமிழ்ப் பெருநாடுதானே பலநூறாயிரமாண்டுகட்குமுன் மக்கட்டோற்றத்திற்கும் காரணமான நிலப்பிரிவாகத் தோற்றுகின்றது" என்றுஞ் சொன்னார்.

4. இப்படிச் சொல்லுதன்றிலே, விந்தத்துக்கும் இமயத்துக்கும் இடையேயுள்ள ஆரியாவர்த்த மென்னும் ஆரியபூமி கடலாயிருந்த காலத்திலே தெற்கே தமிழர் இருந்திருக்கிறார்கள் என்று இவர்கள் நினைக்கிறார்கள்போற் றோன்றுகின்றது. இவர்களுடைய காலக்கணக்கைக் கேட்கத் தலை விறைக்கின்றது. இவர்களுடையகணக்கு உலகத்திலுள்ள மற்றெம்மலையினும் மிக உயரமானதாகிய இமைபாமம் சங்கையுந் தோன்றுதற்கு முன்னுள்ள காலமாதலால், அது "மலையான் மகளொடும் பாடி" "மலைக்கு மருகனைப் பாடிப்பாடி" 'கங்கைவார் சடையாய்' 'கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே' 'மலைமகள் மகனே' எனவுந் தேவார திருவாசக திருமுருகாற்றுப்படைகளிற்சொல்லப்பட்ட சிவபெருமானும் உமாதேவியும் திருமுருகரும் பிறக்க முன்னுள்ள காலமாகும். அடடா! இதை இவர்கள் தாம் போய்ப் பார்த்து வந்தவர்கள்போலும். ஆரியாவர்த்தம் கடலாகவும் தமிழ்நாடு நாடாகவும் இருந்தற்கு முன் ஒருகாலத்தில் தென்னாடு கடலாயிருந்தது இவர்களுக்குத் தெரியாதோ. ஆரியாவர்த்தம் கடலாயிருந்ததைப் பற்றித் தமிழ்நூல்களின் எங்கேனுஞ் சொல்லப்பட்டிருக்கிறதா!

5. இப்படி எழுதுகிறவர்களே பின் 'இங்ஙனம் ஆராய்ந்தவழி ஆரியமொழியின் இனத்தை மேற்கில் நெடுந்தொலைவிலுள்ள வேல்ஸ் நாடளவுங் கண்டனர். இவ்வாராய்ச்சியிற் பெரும்பாலன மக்களின் முதற்றாய்நாடு மத்திய ஆசியா (Asia Minor) என்னும் முடிபில் நிற்பனவாம். சில வேறு முடிபைக் கொண்டவை" 'கால முறைப்படுத்துக் காணுங்கால், இக்கோவை முதல் தெற்கே தொடங்கிப் பின்னர் வடக்கு வடமேற்குத் திக்குகளில் சென்றது என்பதோ, அல்லது வடக்கு வடமேற்கில் தொடங்கி நாளடைவில் தெற்கு நோக்கிச் சென்று முடிந்ததோ உறுதியாய்க் கூறமுடியாது' எனவும் கூறியிருக்கின்றார்கள்.

6. "Dr. Warren has come to comclusion that the original home of the human race must be sought for in regions near the North Pole."

7. "Several Scientific men have now led to think that we must look for the

cradle of the human race in the Artic regions".

8. "Avesta expressly tells us that the happy land of Ariyana Vaijo or the Arian Paradise was located in a region where the sun shon but once a year and that it was destroyed by the invasion of snow and ice which rendered its climate inclement anb necessitated a migration southward." என்று ஸ்ரீ திலகர் பலருடைய அபிப்பிராயங்களையும் எடுத்துக் காட்டி மனிதருடைய உத்பத்தித்தானம் வடதுருவமென்று நிரூபித்தார்.

9. "There were man and animals in the North Pole in the interglacial Period." என்று அவரே மனிதப்பிறப்பு மாத்திரமன்று அங்கே விலங்குகளும் இருந்தன என்றார்.

10. "It is difficult to assign a shorter date for the last glaciation of Europe than a quarter of million of years and human existence antidates that."

11. "As regards the races which inhabited Europe in these early ages the evidence furnished by human remains or skulls show that they were the direct ancestors of the races now living in the different parts of Europe."

12. "In the old glacial drift of Scotland the relics of man are found along with those of fossil elephants." என்று William Draper என்னும் பண்டிதரும் ஐரோப்பாக்கண்டத்தில் முன்னிருந்தவர்களே இப்போது அங்கே இருப்பவருக்கெல்லாம் மூதாதையரென்றார்.

இப்படி இன்னும் அநேக ஐரோப்பிய இந்திய பண்டிதர்கள் வடதுருவமே மனிதருக்கு உத்பத்திதானமென்கிறார்கள். பாரசீகருடைய சாத்திரமும் அப்படியே சொல்லுகின்றது. மனிதருடைய மண்டையோடு காணப்படும் இடத்திற்குக் கீழேதான் சித்காந்திகளுடைய கல்லால மரமும் அடி தேடிப்போன பன்றியும் பழைய தமிழ் ஏடுகளும் காணப்படும்போலும்!

14. மத்திய ரேகைக்குப் பக்கத்திலுள்ள தேசமே மனுஷர் வாசம்பண்ண வசதியான இடமாயிருந்தது என்றும், அது தமிழ்நாடுதான் என்றும் ஒருவர் சொன்னாரே. அந்தத் தேசம் ஆபிரிகாவாயிருந்தாலென்ன. அதுவும் மத்திய ரேகைக்கு இருபக்கத்திலுமுள்ளதுதானே. ஆபிரிக்காவிலுள்ள எகிப்து தேசத்திலுள்ளவர்களே முதற் சீர்திருத்தினவர்களென்பதும் பழையவர்களென்பதும் அநேகர் கருத்து. "Thus we find a high state of civilization in Egypt at about 6000 B. C." எனத் திலகர் எகிப்தியர் இற்றைக்கு எண்ணாயிரம் வருஷங்களுக்கு முன்னேயே சீர்திருத்தினவர்கள் என்று கூறுகின்றார்.

## சடகோபர் என்கிற நம்மாழ்வார்.

(T. பக்தவத்ஸலம், பி. ஏ., எம். பி. பி. ஜி; அவர்களால் செய்யப்பட்ட உபந்யாஸம்.)

திருவளரும் நமது தேசத்தில் மிகவளர்வது பக்தியென்னும் செழுமரம்! அன்பென்னும் வித்தயிட்டு, அருளென்னும் நீர்பாய்ச்சி, ஆசாரம் என்னும் மெத்தச் எருப்போட்டு, ஞானம் என்னும் அழகிய வேலியமைத்துப் பக்தியென்னும் மரத்தைப் பக்குவமாய்வளர்த்தால், அது உல்லாசமான புஷ்பங்களைத் தந்து, மனோகரமான பழங்களை மாண்புடனளித்துத் தேசமெங்கும் திருத்தமே விளக்கும், பூமி முழுவதும் புகழையே பொருத்தும், மனம் முற்றிலும் மாதவனையே நாடச்செய்யும், எல்லாவிதத்திலும் நமக்கு இனிமையே விளைக்கும்! பக்தியைவிட உத்தமமானது யாது? பக்தியைவிட சத்தியமானது யாது? பக்தியைவிட மிக்கதா

யுள்ளது பாரதனிற் கிடையாது. பரந்தாமன் பால் பக்குவமாய் நம்மைச் செலுத்துவது பக்தி. பக்தியைத் தவிர வேறொன்று கிடையாது? பரமனை நாடுவதும் பக்தியா லவன்புகழ் பாடுவதும் தவிர உத்தமமான செயல் உலகத்தில் யாதிருக்கக்கூடும். பிரமாண்டமாயுள்ள பிரபஞ்சம், அகண்டமுடியினதாகிய அற்புத உலகம், கணித்தறிய முடியாத காதிவி, இதிலுள்ள எல்லாவற்றிற்கும் இதற்கும் வாசா மகோசரமாயுள்ளவன் வாசுதேவன், என்னாலும் எழுத்தாலும் சொல்லவே முடியாது, பாவிக்கவேயாகாது. பரந்தெங்கும் காக்கின்றவன் பரந்தாமன், சன்னுக்குச் சன்றாய், அறிவிற் கறிவாய் அகத்துக்கோராதாரமாய், அதனுள் தோன்றும் ஆனந்தவாரிதியாய், ஜோதியாய் ஜோதியுட் ஜோதியாய், ஜோதிப்பிழம்பாய். முதற்பெருஞ் சோதியாய், முடிவிற் பெருஞ்சோதியாய், முற்றிலும் ஜோதியாய் வெற்றி படைத்திருப்பவன் பத்மநாபன். அன்னவன் தன் பொன்னடிபணிந்து நன்னயமான குணங்களை நலமாயணிவதைக் காட்டிலும் உன்னதமான குணம் உலகத்தில் யாதிருக்கக்கூடும். ஐயனைத் தொழுவதைக் காட்டிலும் அகிலத்தில் பெருஞ்செயல் யாது? அவன் புகழ்பாடுவதைக் காட்டிலும் அற்புதமான தொழில் யாது? அவன்கல்யாணகுணங்களை அழகியசொற்களாலும் இனியசந்தத்தாலும் கொண்டாடுவதைக் காட்டிலும் குறைவற்ற நோன்புயாது? அவன் தன் அமலமாகிய விமலம் பூத்த கமலத் திருமுகத்தை மனதில் பாவித்து ஆனந்தவாரியில் அசமந்து குதைந்து, உடல் சிலிர்க்க மனங் களிக்க என்பு நெக்கு நெக்குருக எங்குமில்லாத பரவசம் பொங்கிப் பெருக பக்திக்கடலில் தெப்பமிடுவதைவிட உத்தமமான போகபாக்யம் உலகத்தில் வேறு யாதிருக்கக்கூடும். கடவுளைத் தொழுவதே கண்ணியமான செயல்; அவன் பொன்னடி பணிவதே அற்புதமான கைங்கர்யம்! அவன் பக்தர்களை ஆதரித்து அனுசரிப்பதே ஆனந்த சாம்ராஜ்யம்; கள்ளமேயில்லாத கள்ளழகனுகிய கண்ணபிரானுடைய வண்ணப்பெருமைகளை வாரிவாரி மனத்தில் வகைவகையாய் அலங்கரிப்பதே மனதின் தூய்மைக்கு மாட்சியான சாட்சியாகும். அற்புதப் பிரபஞ்சத்தைப் படைத்த ஐயன் பெருமையைக்கண்டறிய முடியாது வாணாளை அநேகர் வீணாகக் கழிப்பாராயினர். கடவுளில்லையென்று சொல்லுவதைக் காட்டிலும் நாஸ்திகமான கொள்கை காசினியில் வேறே காணக் கிடையாது.

## கடவுளில்லை.

உலகம் தானாய்த்தோன்றி நிலைசலாடிக்கொண்டிருக்கின்றது என்று அபிப்பிராயங்கொண்டு அனர்த்தப்படுவோர் நிரீஸ்வரவாதிகளென்று நிலவுலகத்தில் சொல்லப்படுவார்கள். இக்கொள்கையைப்போல் இவ்வொரு கொள்கை இருட்டைப் பாக்கிக் குருட்டைவிளைப்பது இவ்வுலகில் கிடையாது. ஆதாரமொன்றுமில்லாது இவ்வுலகம் ஆடிக்கொண்டிருக்கிறதென்றால், யாவர் அதனை யதார்த்தமெனச் சொல்லுவர்? ஆதியற்ற தேவதைவற்ற நாதனொருவனில்லாது நானிலம் எப்படியுண்டாகும் தாரணி எவ்விதம் நடைபெறக்கும்? வேதப்பொருள் சொல்வதற்கு மேல் மனதினுள்ளே போதப்பொருளொன்று புகன்று கொண்டிருக்க, ஆதியில்லை, நாதனில்லை, கடவுளில்லை, அகிலத்திற்கும் காரணமில்லை என்று சொல்வதைக் காட்டிலும் வேறென்ன கொள்கை விபரீதம் வாய்ந்திருக்கும்? பொடிப்பொடியான அணுக்கள் படிப்படியாய் ஒன்றுசேர்ந்து, பூலோகமும் புவர்லோகமும் நக்ஷத்திரங்களும் நாகலோகமும் உண்டாக்கிக்கொண்டன வென்றால் செங்கற்களே தானே போட்டுக்கொண்டு சுண்ணாம்புக் காரைவாய்ச் சுயமாயுண்டாக்கிக்கொண்டு, மாடமாளிகை கூடகோபுரம் மெத்தைமேடை மிஞ்சுப்பல கனக்கள் தாமே விரும்பித் தாமே கட்டிக்கொண்டனவென்று சொல்வதுபோலிருக்கும். ஹா! என்ன விபரீதம்! என்ன வேடிக்கை?

(இன்னும் வரும்.)